பக்கங்கள்: 11 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 08 வெள்ளிக்கிழமை 24.09.2021 கதிர் 323

இனிது ரகசியம் அல்ல!

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு காலம் சரியில்லைப் போலும்.தொடர்ந்து நெருக்கடி.

அவரது மிக நெருங்கிய நண்பரும், நம்பிக்கைக்குரிய தனிப்பட்ட மருத்துவ ஆலோசகருமான எலியந்த வைட் கொரோனாத் தொற்றில் உயிரி பக்கம்02 »

## திலீபன் நினைவிடத்தில் கஜேந்திரன் எம்.பி. கைதாகிப் பொலிஸ் பிணையில் விடுவிப்பு

### யாழ். நீதிமன்றில் 27ஆம் திகதி வழக்குத் தாக்கல்



(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

யாழ்., நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் சுடரேற்றி அஞ்சலி செலுத்த முற்பட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட மூவர் நேற்றுப் ☞9

## நினைவேந்தல் உரிமை கூட தமிழர்களுக்கு இல்லையா?

### பொலிஸ் பிணையில் வந்த கஜேந்திரன் எம்.பி.கேள்வி

(இ.கலையமுதன்)

நாட்டினுடைய ஜனாதிபதி ஐ.நாவுக்குச் சென்று தாங்கள் நல்லிணக்கத்தை ஏற்படுத்த போகின்றோம் எனக் கூறுகிறார். ஆனால், எங்களுடைய உறவினர்களை – எங்களுக்காகப் போராடியவர்களை – நினைவு கூருவதற்கான உரிமையைக் கூட வழங்கத் தயாரில்லை.

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட இவர், பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் ☞2

# இலங்கை அரசின் கோரமுகம் இன்னொருமுறை வெளிச்சம்

## கஜேந்திரனின் கைதுக்கு சிறிதரன் கண்டனம்



(ந.லோகதயாளன்)

தமிழின விடுதலைக்காக, காந்திய வழியில் தன் உயிரை ஆகுதியாக்கிய தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் அஞ்சலி செய்தமைக்காக, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளமை கடும் கண்டனத்துக்குரிய செயலாகும். இது இந்த அரசின் கோரமுகத்தை இன்னுமொருமுறை வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கின்றது.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார். ☞2

## அரசின் அராஜகம் தமிழர்களை ஓரணியில் மீண்டும் அணிதிரள்வதை விரைவுபடுத்தும்

### முன்னாள் எம்.பி. சிறிகாந்தா தெரிவிப்பு



அடக்குமுறையைப் பிரயோகித்து தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை நசுக்குவதற்கு அரசு தொடர்ந்து முயற்சிப்பது ஒருபோதும் வெற்றி அளிக்காது. பிரிந்து நிற்கும் தமிழ் மக்கள் ஒரு கொடியின் கீழ் மீண்டும் அணிதிரள்வதை அது விரைவுபடுத்தும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிரேஷ்ட சட்டத்தரணியுமான என்.சிறிகாந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் ☞2

## திலீபனை நினைவேந்தாமல் தடுப்பது எவராலும் ஏற்றுக்கொள்ளவே முடியாது

### வடக்கு அவைத் தலைவர் சி.வீ.கே. கருத்து



(எஸ்.நிதர்ஷன்)

உயிரிழந்தவர்களை நினைவுகூர்வது என்பது எமது அடிப்படை உரிமை. அதிலும் அஹிம்சை வழியில் எமது இன விடுதலைக்காக உண்ணாநோன்பு இருந்து ஆகுதியாகிய தியாகி திலீபனை நினைவுகூராமல் தடுப்பது என்பது எவராலும் ஏற்றுக்கொள்ளவே முடியாது. ☞2

## வடமராட்சி கிழக்கில் மின்னல் தாக்கி ஒருவர் சாவு; மற்றுமொருவர் காயம்!

(ந.லோகதயாளன்)

யாழ்., வடமராட்சி கிழக்கு, வெற்றிலைக்கேணியில் மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுப்பிற்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் வெற்றிலைக்கேணியைச் சேர்ந்த குயின்ரன் சுதர்சன் (வயது 35) என்பவர் உயிரிழந்துள்ளார். கட்டைக்காட்டைச் சேர்ந்த ஸ்ரனிலஸ் ☞2

## O/L பரீட்சை பெறுபேறு வெளியீடு

2020ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் நேற்றிரவு வெளியிடப்பட்டுள்ளன.

இலங்கை ☞2

## கொரோனாத் தொற்றால் மேலும் 72 பேர் உயிரிழப்பு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 72 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 12 ஆயிரத்து 448 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 72 பேரில் 30 பெண்களும் 42 ஆண்களும் உள்ளடங்கின்றனர்.

## நேற்று தொற்று 1,368

இலங்கையில் நேற்று 1,368 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் ☞2

RADIANT DAWN
A Sunday Supplement in English to Kalaikkathir

வாரம் தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில்
காலைக்கதிர் பத்திரிகையில்
RADIANT DAWN
A Sunday Supplement பக்கத்திற்கு தங்கள்
பிள்ளைகளின் ஆங்கில மொழியிலான ஆக்கங்களை
கீழ்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு
அனுப்பி வைக்கவும், மறக்காமல்
மாணவர்களின் முழுப் பெயர், பாடசாலை, தரம், தொடர்பு
இலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு அனுப்புங்கள்.
Kalaikkathiredu@gmail.com
076 443 8622

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ழுந்தமை அவருக்குப் பாதிப்பு என்கின்றன உள்வீட்டு வட்டாரங்கள்.

எலியந்த வைட் அப்படி ஒன்றும் அலோபதி டாக்டர் அல்லர் ஆயுள்வேத வைத்தியருமல்லர். ஒரு வித மத ரீதியான வைத்தியர். மூலிகைகளையே மருந்தாகத் தருவார். தூய ஆவிகளின் உதவியுடன் புற்றுநோயைக் கூட குணமாக்கலாம் என்று கூறுபவர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தனிப்பட்ட மருத்துவரான இவர் பலர் பிரபல கிரிக்கெட் வீரர்களுக்கும் கிசிச்சையளிப்பவர்.

பிரிட்டிஷ் வம்சாவளியைச் சேர்ந்த அவர் களுபோவிலவில் வளர்ந்தவர். மாற்ற முடியாத புற்றுநோயால் பாதிக்கப்பட்டவரை தனக்கிருந்த ரிஷிகளினுடைய ஆவிகளின் ஆசீர்வாதம் மூலம் பன்னிரண்டு வயதில் குணமாக்கினார் என்றும், அந்தத் திறமை மூலம் வி.ஐ.பிக்களுக்கு அவர் சிகிச்சை வழங்கி வந்தார் என்றும் கூறப்படுகின்றது.

கொழும்பில் சார்க் மாநாட்டில் பங்குபற்ற வந்த அப்போதைய இந்தியப் பிரதமரின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் முதுகு வலியால் அவதிப்பட, அவருக்குத் தனது தனிப்பட்ட வைத்தியரான எலியந்த வைட்டை அறிமுகப்படுத்தி வைத்தார் மஹிந்தர். அதற்குப் பின்னர் நாராயணனுக்கு சிகிச்சை அளிக்க அடிக்கடி இந்தியா பறந்தார் வைட்.

வண சோபித தேரர், பத்திரிகையாளர் லஸந்த விக்கிரமசதுங்க போன்றோருக்கும் எலியந்த வைட்டை மஹிந்தரே அறிமுகம் செய்து வைத்தார். அவரிடம் கிசிச்சை பெற்றவர்களில் அந்த இருவரும் இப்போது உயிருடன் இல்லை.

சச்சின் டெண்டுல்கர், மலேசிய வாசுதேவன் என்று இவரிடம் ஆத்மீகத் தொடர்பான சிகிச்சைப் பெற்ற வி.ஐ.பிக்கள் பலர். பெரும்பாலும் வி.ஐ.பிக்களுக்கு மட்டுமே இவர் கிசிச்சை வழங்குவாராம்.

எனினும், மஹிந்தவின் இராச்சியத்தில் – அலரி மாளிகையில் – அவர்தான் ஆஸ்தான வைத்தியர்.

கொரோனா வைரஸ் தமது ஆத்மீக மருத்துவத்தின் முன் நின்று பிடிக்காது என்று தைரியத்துடன் இருந்த அவர் அதனால் தடுப்பூசி ஏற்றவில்லை.

ஆனால் கொரோனா வைரஸ் அவரை விட்டு வைக்கவில்லை. அவரது ஆத்மீக வலிமைக்கும் அந்த நுண்ணுயிரி அடிபணியவில்லை. தொற்று அவதானிக்கப்பட்டு, ஒரு வாரத்தில் காலமானார் அவர். அவரது ஆத்மீக வைத்தியம் 48 வயதுக்கு மேல் அவர் வாழ இடமளிக்கவில்லை என்பதுதான் சோகம்.

ஹர்ஷ டி சில்வா எம்.பி., சல்மான் கான், அஷிஸ் நெஹ்ரா, இயன் சப்பல், லசித் மலிங்க, லக்ஷ்மன் செனிவிரத்ன, அமைச்சர் பந்துல குணவர்த்தன என்று மேலும் பல வி.ஐ.பிக்கள் இவரிடம் சிகிச்சை பெற்று வந்தனர்.

தமது ஆஸ்தான மருத்துவரின் எதிர்பாராத மறைவு – அது நேர்ந்த விதம் – என்பன மஹிந்தரை வேதனையில் ஆழ்த்தியிருக்கின்றன என்று கூறப்படுகின்றது.

போதாக்குறைக்கு வெளிநாட்டுப் பயணக் களைப்பு, அசௌகரியம் ஆகியனவும் அவரைப் பாடாய்ப் படுத்துகின்றன.

இந்தச் சூழ்நிலையில் ஆளும் தரப்பு சில்லெடுப்பு வேறு அவரைச் சிக்கலில் மாட்டியுள்ளதாகத் தெரிகின்றது.

கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலையத்தின் பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்குக் காதும் காதும் வைத்தால் போல கைமாற்றிய நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் நடவடிக்கைக்கு எதிராக ஆளும் கூட்டணியின் பங்காளிக் கட்சிகள் பலவும் ஒன்றாகக் கெம்பி எழுந்துள்ளன. இந்த விடயத்தை அனுமதிப்பதில்லை என்று அவை ஒரே குரலில் அடம் பிடித்து நிற்கின்றன. கடந்த வாரம் இவ்விடயம் வெளியே தெரிய வந்தமையை அடுத்து அமைச்சர்கள் வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில்ல, விமல் வீரவன்ஸ ஆகிய மூவரும் தனித்தனியாக ஜனாதிபதிக்கு ஆட்சேபக் கடிதங்களை அனுப்பினர். அவர்களது மூன்று கட்சிகள் உட்பட ஆட்சிக் கூட்டில் இடம் பெற்ற பதினொரு பங்காளிக் கட்சிகள், கம்யூனிஸ்ட் கட்சியின் அலுவலகத்தில் கூடி இவ்விவகாரம் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து மந்திராலோசனை செய்தன. பின்னர் அடுத்த கூட்டம் சுதந்திரக் கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. அரசுக் கூட்டில் இரண்டாவது பெரிய கட்சியான சு.கவும், இந்த விடயத்தில் மேற்படி பதினொரு கட்சிகளுடன் அணி சேர்ந்து விட்டது.

இவை எல்லாவற்றினதும் பிரதிநிதிகளும், ஓரிரு தினங்களுக்கு முன்னர் நாடு திரும்பிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை ஓய்வெடுக்க விடாமல் நேற்றுப் போய்ச் சந்தித்தன. கரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலையப் பங்குகளை அமெரிக்காவுக்குக் கைமாற்றும் நடவடிக்கையை உடன் நிறுத்தும்படி பிரதமரின் குரல்வளையைப் பிடிக்காத குறையாக இக்கட்சிகள் எல்லாம் வலியுறுத்தின என்று தெரிகின்றது.

அமெரிக்கா சென்றிருக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பியதும் மேற்கொண்டு தீர்மானிக்கலாம் என்று கூறி நேற்றுப் பங்காளிக் கட்சிகளைச் சமாதானம் செய்து அனுப்பி வைத்தார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ என்றும் அறியவந்தது.

பாவம், பிரதமர்....! அதீத நெருக்கடியில்தான் இருக்கின்றார். அவருக்கு நம்பிக்கை சிகிச்சை அளிப்பதற்கும் ஆத்மீக வைத்தியர் எலியந்த வைட் அருகில் இல்லை. என்ன செய்வார் அவர்?

– மின்னல் –

## O/L பரீட்சை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் பெறுபேறுகளைப் பார்வையிட முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதத்தில் பரீட்சை நடைபெற்றதுடன், நாட்டில் நிலவும் கொரோனாத் தொற்றால் அமுல்படுத்தப்பட்ட ஊரடங்கு காரணமாக அதற்கான செயன்முறைப் பரீட்சைகளை நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டிருந்தது. இதனால் பெறுபேற்றை வெளியிடுவது தாமதமாகியது.

இந்நிலையில் நேற்றிரவு பெறுபேற்றை பரீட்சைகள் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

எவ்வாறாயினும் பரீட்சைக்குரிய செயன்முறைப் பரீட்சைகளை பாடசாலைகள் திறக்கப்பட்ட பின்னர் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறை பரீட்சையில் நாடு முழுவதும் இருந்து 6 இலட்சத்து 22 ஆயிரத்து 352 பேர் தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கஜேந்திரன் எம்.பியின் கைது தொடர்பில் சிறிதரன் எம்.பி. வெளியிட்டுள்ள கண்டனத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:–

சர்வதேச நியமங்களுக்கும், நாடாளுமன்ற நிலையியல் கட்டளைக்கும் அமைவாக, விதித்துரைக்கப்பட்ட சிறப்புரிமைகளுக்கு உரித்துடைய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், தன் இனத்துக்காக உயிர்த்தியாகம் செய்த தியாகச் செம்மல் திலீபனின் நினைவிடத்தில் அஞ்சலி செய்தமைக்காக, ஆயுதமுனையில் அதியுச்ச வன்முறைப் பிரயோகங்களோடு கைதுசெய்யப்பட்டுள்ளமை இந்த அரசின் கோர முகத்தை இன்னுமொருமுறை வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கின்றது.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் மீது, அவரது சிறப்புரிமைகளை மீறும் வகையில், இந்த ஜனநாயக நாட்டில் இத்தனை மோசமான அரச வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளமையானது, இங்குள்ள சாதாரண தமிழர்களின் இயல்பு வாழ்வுக்கு எந்த உத்தரவாதமும் இல்லை என்பதைத் தெட்டத்தெளிவாக எண்பித்துள்ளது.

தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் அமைதியான முறையில் அஞ்சலி செய்த நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனை ஒரு குற்றவாளியைப்போல் வலுக்கட்டாயமாகப் பொலிஸார் கைதுசெய்தமைக்கு எனது வலுவான கண்டனங்களைப் பதிவு செய்கின்றேன் – என்றுள்ளது.

## நினைவேந்தல் உரிமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

தியாக தீபம் திலீபனின் நினைவிடத்துக்குச் சுடரேற்றுவதற்கு நான் தயாராகும்போது அங்கு நின்ற பொலிஸார் தடுத்தார்கள். நான் அவர்களிடம் கேட்டேன் நீதிமன்றத் தடை உத்தரவு இருக்கின்றதா என்று? ஆனால்,அவர்கள் நீதிமன்றத் தடை உத்தரவைக் காண்பிக்கவில்லை. நீதிமன்றத் தடை உத்தரவை நாங்கள் மதிக்கின்றோம். ஆனால், எங்கள் உரிமையை மீறும் உங்களது செயலை ஏற்க முடியாது எனத் தெரிவித்தேன்.

நினைவிடத்துக்கு உள்ளே செல்ல அனுமதிக்காத நிலையில், நினைவிடத்துக்கு முன்பாக நான் நின்ற இடத்திலேயே சுடரேற்றியபோது அங்கு இருந்த பொலிஸார் மிலேச்சத்தனமாகக் காட்டுமிராண்டித்தனமாக எங்களுடைய மக்களின் உணர்வுகளைப் புண்படுத்தும் விதமாக அதனைத்தட்டி அணைத்தார்கள். அதனை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். நினைவுகூரும் உரிமை என்பது எங்கள் எல்லோருக்கும் இருக்கின்றது.

பொலிஸார் சட்டம் – ஒழுங்கைப் பாதுகாப்போம் என்ற போர்வையில் தமிழர்களை அடக்கி ஒடுக்கி சிங்கள பௌத்த மேலாண்மையை நிறுவ இங்கிருந்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

எந்தவொரு இடத்திலும் தமிழர்களுடைய உணர்வுகளை மதித்து செயற்பட அவர்கள் தயாராக இல்லை. இந்த நாட்டினுடைய ஜனாதிபதி ஐ.நாவுக்குச் சென்று தாங்கள் நல்லிணக்கத்தை ஏற்படுத்தப் போகின்றோம் எனக் கூறுகின்றார். ஆனால், எங்களுடைய உறவினர்களை – எங்களுக்காகப் போராடியவர்களை நினைவுகூரும் உரிமையைக் கூட வழங்கத் தயாரில்லை.

இப்போது எங்களைக் கைதுசெய்து கொண்டுவந்து தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியதாக வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இதில் நான் தனியாகத்தான் அங்கு சுடரேற்ற சென்று இருந்தேன். அப்போது அந்த இடத்தில் பொலிஸார் என்னுடன் முரண்பட்டபோது, என்ன நடைபெறுகின்றதென நியாயம் கேட்க முற்பட்ட போது அவர்களையும் சேர்த்து கைதுசெய்து தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியதாக எதிர்வரும் ஒக்டோபர் 27ஆம் திகதி வழக்குக்குத் தவணையிடப்பட்டுள்ளது.

தனி ஒருவனாக நான் அந்த இடத்தில் சென்றால்கூட சட்டத்தை மீறியதாக சித்திரிக்கப்படுகின்றது. சிறைச்சாலைக் குள் சென்று கைத்துப்பாக்கியைத் தலை யில் வைத்து கொலை அச்சுறுத்தல் விடுத்தவர் இதுவரை கைதுசெய்யப்பட வில்லை – என்றார்.

## திலீபனை நினை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

– இவ்வாறு வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

தியாக தீபம் திலீபனை நினைவுகூர்ந்தமைக்காகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட மூவரை யாழ்ப்பாணம் பொலிஸார் கைதுசெய்த சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கின்றேன் என்றும் அவர் மேலும் கூறினார்.

## நேற்று தொற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 10 ஆயிரத்து 40 ஆக அதிகரித்துள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 16 ஆயிரத்து 720 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 51 ஆயிரத்து 742 ஆக உயர்வடைந்துள்ளது.

## வடமராட்சி கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜெயக்குமார் (வயது 45) என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று பிற்பகல் அப்பகுதியில் மழை பொழிந்தது எனவும், அவ்வேளை வெற்றிலைக்கேணி – கோரியடிப் பகுதியிலுள்ள வாடியில் நின்றிருந்த மீனவர்கள் மீது மின்னல் தாக்கியது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரசின் அராஜகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொலிஸாரின் இந்த அராஜகத்தைத் தமிழ்த் தேசியக் கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது எனவும் அவர் மேலும் கூறினார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் கஜேந்திரன் எம்.பியின் கைது தொடர்பில் வெளியிட்டுள்ள கண்டனத்திலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.



# எஸ்டர் தாக்குதலுக்கு நீதி கோரி அமெரிக்காவில் பாரிய போராட்டம்!



அமெரிக்காவின் நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகளின் தலைமை அலுவலகம் முன்பாக இலங்கையர்களால் கடந்த புதன்கிழமை போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இலங்கையில் 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்றஈஸ்டர் பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு நீதி கோரி இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

இந்த தாக்குதல்கள் தொடர்பாக உரிய விசாரணை நடத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வலியுறுத்துகிறோம் என போராட்டக்காரர்கள் தெரி வித்தனர்.

# சார்க் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களின் கூட்டம் இரத்து

சார்க் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களின் கூட்டம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டுக்கான சார்க் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களின் கூட்டம் கொரோனா வைரஸ் பரவல் காரணமாக இந்த ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதற்கமைய, சார்க் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களின் கூட்டத்தை எதிர்வரும் 25ஆம் திகதி நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், குறித்த கூட்டத்தில் ஆப்கானிஸ்தானை பிரதிநிதித்துவப்படுத்தி தலிபான்கள் கலந்து கொள்ள வேண்டுமென பாகிஸ்தான் கோரிக்கை விடுத்திருந்தது.

அந்தக் கோரிக்கையை பெரும்பாலான உறுப்பு நாடுகள் ஏற்று கொள்ள மறுத்தமை காரணமாக சார்க் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களின் கூட்டம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

தலிபான்கள் பங்கேற்பதற்கு உறுப்பு நாடுகளின் அனுமதி இல்லாமை காரணமாக கூட்டம் ரத்து செய்யப்பட்டுள்ளதாக நேபாள வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

நேபாள வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையொன்றிலே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# வவுனியா வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்கள்

வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாயிகள், வவுனியா மாவட்ட கமநல சேவை நிலையங்களின் நிதிப்பங்களிப்பில் வவுனியா பொது வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்கள் நேற்று (வியாழக்கிழமை) வழங்கிவைக்கப்பட்டன.

கொரோனாத் தொற்று நோயாளர்கள் அதிகரித்து வரும் நிலையில் அதனைக் கருத்தில் கொண்டு இந்த உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

அந்தவகையில் 10 ஒட்சிசன் சிலிண்டர்கள் மற்றும் மூன்று கட்டில்கள் என 10 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் இதன்போது வழங்கிவைக்கப்பட்டன.

இந்த உபகரணங்களை கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் விஸ்னுதாசன் வவுனியா வைத்தியசாலை பணிப்பாளர் க.ராகுலனிடம் உத்தியோகபூர்வமாகக் கையளித்தார்.



# அமெரிக்காவிலுள்ள இலங்கையர்களின் உதவியில் விமானப் படையினரால் சுவாசக் கருவி தயாரிப்பு





இலங்கை விமானப்படையினால் நிர்மாணிக்கப்படும் வெப்ப ஈரப்பதன்மைமூலம் ஒட்சிசன் வழங்கும் சிகிச்சை கருவிகளுக்காக அமெரிக்காவில் வசிக்கும் இலங்கையர்களால் முக்கிய உபகரணங்கள் விமானப்படைக்கு கையளிக்கப்பட்டன.

அமெரிக்காவில் வசிக்கும் இலங்கையர்களின் நிதி உதவியுடன் கொவிட் - 19 தொற்றால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக இலங்கை விமானப்படையால் தயாரிக்கப்பட்ட வெப்ப ஈரப்பதன்மைமூலம் ஒட்சிசன் வழங்கும் சிகிச்சை கருவிகள் உருவாக்குவதற்கான உபகரணங்களை இலங்கை விமானப்படைக்கு கையளிக்கும் வைபவம் கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு விமானப்படை தலைமையகத்தில் இடம்பெற்றது.

இந்த உபகரணங்களை விமானப்படை சுகாதாரப்பணிப்பாளர் எயார் வைஸ் மார்ஷல் லலித் ஜயவீர பொறுப்பேற்றார்.

கட்டுநாயக்க விமானப்படைத் தளத்தில் அமைந்துள்ள விமானப் படை பொது பொறியியல் பிரிவு மற்றும் ரத்மலான விமானப்படைத்தளத்தில் அமைந்துள்ள மின் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் பிரிவு ஆகிய பிரிவுகள் இணைந்து இந்த கருவியை நிர்மாணிக்கின்றன.

இந்த கருவி கொவிட் - 19 தொற்றுக்குள்ளான நோயாளர்களின் சுவாசகோளாறு தொடர்பான சிகிச்சைகளுக்கு பெரிதும் உதவுகின்றது.

மேலும் இந்த சிகிச்சை கருவிகளின் உற்பத்திகளை அதிகரிக்கவே அமெரிக்காவில் வசிக்கும் இலங்கையர்களினால் இந்த நன்கொடை வழங்கப்பட்டது. இதன்மூலம் கொவிட்-19 தொற்றுக்குள்ளான நோயாளிகளின் உயிர்களை பாதுகாப்பதில் பெரும் பங்களிப்பை மேற்கொள்ள முடியும்.

இந்த நிகழ்வில் விமானப்படை மின்னணு மற்றும் தொலைத்தொடர்பு பணிப்பாளர் மற்றும் விமானப்படை பொதுப்பொறியியல் பிரிவு பிரதிப் பணிப்பாளர் ஆகியோர் உட்பட அதிகாரிகள், படைவீரர்கள் ஆகியோர் பங்குபற்றினர் இந்த நிகழ்வுகள் சுகாதாரப்பிரிவின் வழிகாட்டல் மற்றும் பரிந்துரைகளுக்கு ஏற்ப இடம்பெற்றது.

# இலங்கை, ஆஸ்திரேலியக் கம்பன் கழகங்கள் இணைந்து நடத்தும் முந்து தமிழ் இயலரங்கு

அகில இலங்கைக் கம்பன் கழகமும் ஆஸ்திரேலியக் கம்பன் கழகமும் இணைந்து நடத்தும் 'முந்துதமிழ்' எனும் மாதாந்த இயலரங்கின் செப்டெம்பர் மாத நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு (இலங்கை நேரம்) நிகழ்நிலை நிகழ்வாக நடைபெறும்.

இந்நிகழ்வு, ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த சிவாச்சாரியார் சிவஸ்ரீ இந்திரன் குருக்களின் மங்கல ஆரத்தியோடும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மதூஷிகனின் கடவுள் வாழ்த்தோடும் ஆரம்பிக்க உள்ளது.

இந்நிகழ்வின் சிறப்பு நிகழ்வாக, தமிழ் நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் கண. சிற்சபேசன் ஐயா தலைமையில்

'ஊழிற்பெருவலியாவுள' என்ற பொருளிலான கருத்தரங்கு மலரவுள்ளது.

ஊழின் பெருவலியை துருவி ஆராய்ந்து பேசி மகிழ்விக்க அறிஞர் பெருமக்கள் காத்திருக்கிறார்கள்.

சிலப்பதிகாரத்தில் ஊழ் - பேராசிரியர் ஸ்ரீ. பிரசாந்தன்.

திருக்குறளில் ஊழ் - பேராசிரியர் இ. இராமச்சந்திரன்

கம்பராமாயணத்தில் ஊழ் - புலவர் இரா. இராமமூர்த்தி ஆகியோர் விரித்துரைக்க உள்ளனர்.

உலகெங்கிலும் நோயும் அச்சமும் நிறைந்திருக்கும் இன்றைய நிலையில் நம் துன்பங்களுக்கெல்லாம் காரணமானதாகச் சொல்லப்படும் ஊழின் வலியை அறிந்து பயன்பெற பெரியோர்கள் கூடி துணை செய்ய இருக்கிறார்கள். இந் நிகழ்வை அனைவரும் கண்டுகளித்து பயன் பெறுங்கள்.

ஒவ்வொரு மாதமும் நிறைவுச் சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு முந்து தமிழ் நிகழ்வு இடம்பெறும்.

AKILA ILANGAI KAMBAN KAZHAGAM
KAMBAN KAZHAGAM AUSTRALIA

எனும் யூடியுப் முகவரிகளிலும்

KAMBAVARITHY ILANKAI JEYARAJ
KAMBAN KAZHAGAM AUSTRALIA

எனும் பேஸ்புக் முகவரிகளிலும் பார்த்து மகிழலாம். இணையவழி நேரலையாக

# டெல்டா தாக்கம் குறைந்துள்ளபோதிலும் மற்றொரு உச்சம் ஏற்பட 60 வீத வாய்ப்பு

## சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை

கொரோனா வைரஸின் டெல்டா பிறழ்வின் உச்சம் இப்போது இலங்கையில் முடிந்துவிட்டபோதும் எதிர்வரும் வாரங்களில் மற்றொரு உச்சம் ஏற்பட இன்னும் 60 வீத வாய்ப்பு உள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனவே, மற்றொரு பெரிய உச்சத்தைத் தடுக்க, மக்கள் எப்போதும் சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டுமென சமூக மருத்துவப் பேராசிரியர், ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சுனத் அகம்பொடி ஆங்கில ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

தற்போதைய தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவின் காரணமாக பொது நடமாட்டம் கடுமையாகக் குறைந்துள்ளதால், நாட்டில் இறப்புகள் மற்றும் நோயாளிகளின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து வருகிறது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் இலங்கையில் மிகவும் தொற்றக்கூடிய டெல்டா வகையின் உச்சம் முடிந்துவிட்டதாக சுகாதார அதிகாரிகள் நம்புகின்றனர்.

எனினும், ஏனைய நாடுகளில் இருக்கும் கடுமையான பிறழ்வுகளுடன் எதிர்வரும் வாரங்கள் அல்லது மாதங்களில் மற்றொரு உச்சம் ஏற்பட இன்னும் 60 வீத வாய்ப்புள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

எனவே மக்கள் எப்போதும் சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

தடுப்பூசிகள் கொரோனா பரவுவதைத் தடுக்கலாம் என்ற தவறான பாசாங்கு மூலம் தவறாக வழிநடத்தப்படக் கூடாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தடுப்பூசி கொரோனாவால் ஏற்படும் பாதிப்பைக் குறைக்குமே அன்றி கொரோனாப் பரவலைத் தடுக்காது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir


# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## எடுப்பார் கைப்பிள்ளைகள்

**அறவழியில் – காந்தீய மார்க்கத்தில் – அஹிம்சை முறையில் – தன்னையே வருத்தி, உண்ணா நோன்பிருந்து, தன்னையே ஆகுதியாக்கியவன் திலீபன். அந்தத் தியாகியை நினைவு கூரக் கூடத் தமிழர்களுக்கு உரிமை இல்லை.**

**ஆனால் ஐ.நா.வின் பெருமன்றத்தில் போய் நின்று கொண்டு பௌத்த, சிங்களப் பேரினவாத வெறிப்பிடித்த – மேலாண்மைத் திமிர் கொண்ட – மேலாதிக்க அரசின் தலைவர் நல்லிணக்கம், புரிந்துணர்வு, நிலையான அமைதி, நீடித்த சமாதானம் பற்றி எல்லாம் பேசுகின்றார்.**

**முதல் நாள் ஐ.நா. மன்றத்தில் சாத்தான்தான் வேதம் ஓதியது என்பதை அடுத்த நாள் யாழ். நீதிமன்றத்தில் தனது விண்ணப்பம் மூலம் இந்த அரசின் பொலிஸ் நிரூபித்துக் கொண்டது.**

**தமிழர்களின் இனத்துவமான நினைவு கூரல் விடயங்களில் இலங்கைப் பொலிஸாரின் திருகுதாளமான வழி நடத்தலில் நீதிமன்றங்கள் பண்ணும் அலப்பறை பெரிய பிய்ச்சல், பிடுங்கலாக இருக்கின்றது.**

**இரண்டு வருடங்களுக்கு முன்னரும் இப்படித்தான் இதே யாழ் நீதிமன்றத்தில் பொலிஸார் திலீபன் நினைவேந்தலுக்குத் தடை உத்தரவு கோரி விண்ணப்பித்தனர். அப்போதிருந்த மேயர் ஆர்னோல்டின் நடவடிக்கையால் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நீதிமன்றில் பிரசன்னமாகி வாதிட்டு, தடை உத்தரவு விண்ணப்பத்தை நிராகரிக்க வைத்து, நினைவேந்தலுக்கு வழி செய்தார். ஆனால் அது நல்லாட்சி அரசின் காலம்.**

**கடந்த வருடமும் இதே மாதிரி நீதிமன்றங்கள் தோறும் விண்ணப்பித்து தடை உத்தரவு பெற்றது சிங்கள மேலாதிக்க அரசின் ஏவல் அமைப்பான பொலிஸ். எனினும் சாவகச்சேரி நீதிமன்றத்திடம் அந்தத் தடை பெறப்படாமையால் தமிழ்த் தலைவர்கள் அங்கு ஒன்று கூடி இந்த நினைவேந்தல் நிகழ்வை ஒப்பேற்றினர். அது கடந்த வருடத்தில். இப்போது இந்த வருடம் வந்து விட்டது.**

**தமிழர்கள் தங்கள் மறைந்த போராளிகளை நினைவு கூர்வதைத் தேடித் தேடித் தடுப்பதுதான் பொலிஸின் வேலையும் அதற்கு உத்தரவாதமளிப்பதுதான் தமிழ்ப் பிரதேச நீதிமன்றங்களின் பணியும் என்றாகி விட்டது.**

**ஜே.வி.பி. தலைவர் றோஹண விஜேவீரவும் பயங்கரவாதியாகத்தான் கொல்லப்பட்டார். ஆனால் அவரைப் பெரும் கூட்டம் நடத்தி, வருடம் தோறும் நினைவு கூர அனுமதிக்கும் பௌத்த, சிங்களப் பேரினவாத அரசும், அதன் பொலிஸும், நீதிமன்றங்களும், தமிழ்ப் போராளிகளை – அதுவும் அஹிம்சை வழியில் போராடி, தன்னையே காந்தீய நெறியில் ஆகுதியாக்கிய ஒரு தியாகியை – நினைவு கூர விடாமல் கங்கணம் கட்டி நிற்கின்றன.**

**நல்லாட்சி அரசில் இதற்கெல்லாம் – நினைவு கூரலுக்கு எல்லாம் – அனுமதி இருந்தது. அத்தகைய நினைவு கூரலுக்குப் பொலிஸாரே பாதுகாப்பும் வழங்கினர்.**

**இப்போது சட்டங்களோ, நீதிமுறைமைகளோ மாறவில்லை, அரசுதான் மாறிவிட்டது. பௌத்த, சிங்களப் பேரினவாத வெறி கோலோச்சத் தொடங்கி விட்டது. உடனே பொலிஸும் நீதித்துறையும் மாறி விட்டன.**

**இதைத்தான் எடுப்பார் கைப்பிள்ளைத் திருவிழா என்பது.**

**இந்தியா போன்ற நாட்டின் நீதித்துறையை இப்படி ஆட்டுவிக்க முடியாது. இதுதான் இலங்கை யின் நீதித்துறையின் சீத்துவம்.**

# கோட்டாவின் புலம்பெயர் அழைப்புக்கு நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் பதில்!

புலம்பெயர் தமிழர்களை நோக்கி சிறிலங்கா அதிபர் கோட்டா விடுத்திருந்த அழைப்பு தொடர்பில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தனது கருத்தைத் தெரிவித்துள்ளது.

அவை வருமாறு -

யூத இனப்படுகொலையைப் புரிந்த ஹிட்லர் ஆட்சியில் இருக்க முடிந்திருந்தால், புலம்பெயர் யூதர்களுடன் பேச ஹிட்லர் அழைப்பது போன்றே, புலம்பெயர் தமிழர்களுடன் பேசுவதற்கான சிறிலங்கா அதிபர் கோட்டாவின் அழைப்பு உள்ளது.

இனப்படுகொலையைப் புரிந்த அரசுடன் முக்கிய விடயமான தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக உரையாடல் நடத்துவது கடினமான ஒன்றாகும்.

எந்தவொரு அரசியல் தீர்வுக்கும் பொறுப்புக்கூறல் என்பது முக்கியமானதொரு முன்னவசிமாகும். இலங்கைத்தீவில் அமைதியைக் கொண்டுவருவதில் கோட்டாவுக்கு உண்மையான ஆர்வம் இருந்தால், முதற்படியாக, ஐ.நா. மனித உரிமைகள் சபையின் முன்னாள் ஆணையர் அல் ஹுசைன், 2015 இல் பரிந்துரைத்திருந்த 'ரோம் உடன்படிக்கையில்' கைச்சாத்திட்டுக் கொள்ள வேண்டும். மேலும் கைச்சாத்திட்டு பின்னோக்கி காலத்தையும் உள்வாங்கியதாக வேண்டும். இறுதிப்போரில் நடந்த இனப்படுகொலை, மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க்குற்றங்களை புரிந்த குற்றவாளிகளை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றில் விசாரித்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும்.

இரண்டாவதாக, சிறிலங்காவின் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள போர்க் கைதிகள், அரசியற் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும். 'பொது மன்னிப்பு' என்ற 'விசர்' கதைகளை குப்பையில் போடுங்கள். யாரை யார் மன்னிப்பது ?

தமிழர் பகுதிகளில் தொல்பொருள் ஆய்வுகள், அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் வனப் பாதுகாப்பு என்ற போர்வையில் மேற்கொள்ளப்படுகின்ற அபகரிப்புக்கள் நிறுத்தப்பட வேண்டும். அத்துடன் தமிழர் பகுதிகளில் இருந்து இராணுவமயமாக்கல் நீக்கம் (விலக்கி) செய்யப்பட வேண்டும். மேலும், காணாமல் போனவர்களுக்கான அலுவலகத்தை ஒரு நடுநிலையான, நம்பகமான நிறுவனமாக மாற்றியமைக்கும் வகையில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நியமிக்கும் நிபுணர்களை உறுப்பினர்களாக நியமிக்கவும், பாதிக்கப்பட்டவர் உறவுகள் பங்கெடுக்கின்ற வகையிலான ஒரு பொறிமுறையை உருவாக்க வேண்டும். தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளப்படுகின்ற அந்நிய முதலீடுகளைத் தீர்மானிக்கின்ற அதிகாரம் தமிழர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

இறுதியாக, இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர் டேவிட் கமரூன், ஸ்கொட்லாந்து விவகாரத்தில் பொது வாக்கெடுப்புக்கான உறுதியான கால அட்டவணையை அமைத்தமை போல், தமிழர்கள் தங்கள் அரசியல் தலைவிதியைத் தாமே முடிவு செய்கின்ற வகையில் பொதுவாக்கெடுப்புக்கான நடவடிக்கையை தமிழர் அரசியல் தலைமைகளுடன் சேர்ந்து முன்னெடுக்க வேண்டும். இந்தப் பொது வாக்கெடுப்பில் சுதந்திரமும் இறையாண்மையும் கொண்ட தமிழீழமும் உள்ளடங்க பல்வேறு அரசியல் தீர்வுகள் உள்ளடங்கலாக இருக்க வேண்டும்.

தேவையான இந்த செயல்வழிப்பாதையை சிறிலங்கா அதிபர் நிறைவேற்றிய பிறகு, பேச்சுக்களை நடத்துவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். இதுவே இலங்கைத் தீவின் நிரந்தரமான அமைதிக்கும், பாதுகாப்புக்கும் மற்றும் செழிப்புக்குமான வழித்தடமாக அமையும் என நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் கருத்துரைத்துள்ளது. - என்றுள்ளது.

# அமைச்சர் நாமல் ராஜபக்ஷ மட்டக்களப்புக்கு விஜயம்



பின்தங்கிய கிராமிய அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் வேண்டுகோளின் கீழ் இளைஞர் விவகாரம், விளையாட்டுத் துறை மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை கண்காணிக்கும் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ நேற்று (வியாழக்கிழமை) மட்டக்களப்பு மாவட்டத்துக்கு விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் கிராமிய விளையாட்டு மைதானங்களை மேம்படுத்தும் வேலைத் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படும் விளையாட்டு மைதானங்கள் அபிவிருத்தி, மட்டக்களப்பு மாவட்டத்தின் பால் உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் மற்றும் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலான கலந்துரையாடல், புன்னக்குடா பகுதியில் அமைக்கப்பட்ட ஆடைத் தொழிற்சாலை, முதலீட்டு வளையம் அபிவிருத்தி பணி ஆகிய வேலைத்திட்ட பிரதேசங்களுக்கு அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டார். இந்த அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

இந்தக் கண்காணிப்பு விஜயத்தின்போது பின்தங்கிய கிராமிய அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் தேனுக விதானகமகே, நாடாளுமன்ற உறுப்பினர் நசீர் அகமட், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பிரசாந்தன் ஆகியோரும் அமைச்சருடன் விஜயத்தில் இணைந்துகொண்டனர்.

இந்த விஜயத்தின்போது மாவட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள், மட்டக்களப்பு மாவட்டத்தில் இளைஞர் மையங்களை நிறுவுவதற்கான நடவடிக்கை தொடர்பிலும் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவிடம் கலந்துரையாடினார்.

இந்த இளைஞர் மையங்கள், இளைஞர் அமைப்புகள் அல்லது இளைஞர் கழகங்கள் போன்றதல்ல. இதன் மூலம் இளைஞர்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையைக் கட்டியெழுப்பவும், வேலைவாய்ப்பிற்கான விண்ணப்பத்தை நிரப்பவும், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பிற்கான வழிகாட்டுதல்களை வழங்கவும், டிஜிற்றல் தொழில்நுட்ப தொழிற்பயிற்சியில் கவனம் செலுத்தவும், பொழுதுபோக்கிற்காக நடனம் உள்ளிட்ட கலாசார ரீதியாக ஒருங்கிணைந்த மையத்தை உருவாக்குவதற்கே இதன்மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

அதேபோன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் விளையாட்டுத் துறையை ஊக்குவிப்பதற்காக நவீன வசதிகளுடன் கூடிய விளையாட்டுமைதானங்கள் அமைப்பது தொடர்பிலும் கிராமிய மட்டத்தில் ரேபிள் டென்னிஸ், பூப்பந்து, கராத்தே மற்றும் குத்துச்சண்டை போன்ற விளையாட்டுக்களை ஊக்குவிப்பதற்கு மட்டக்களப்பு மாவட்டத்தின் பாடசாலைகளுக்கு விளையாட்டுப் பொருள்கள் மற்றும் பயிற்சியாளர்களை பெற்றுக்கொள்வது தொடர்பிலும். அடுத்த வருடம் இடம்பெறவுள்ள ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர்களை ஈடுபடுத்தவும் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவிடம் இராஜாங்க அமைச்சரால் கலந்துரையாடப்பட்டது.

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

## எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

அங்கம் - 85

ந.வித்தியாதரன்




நான் தினபதி, சிந்தாமணியில் இணைந்த 1979 - 1980 காலப்பகுதியில் அங்கு இன்னொரு மூத்த ஆளுமையான பத்திரிகையாளர் இருந்தார். அவர் சிந்தாமணி ஆசிரியர் இராஜ அரியரத்தினம்.

1941 முதல் 1958 வரை யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த 'ஈழகேசரி' பத்திரிகையின் ஆசிரியராக இருந்தவர். அரியம், சோனாசலம் என்ற பெயர்களில் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் எழுதியவர். 1958 இல் ஈழகேசரி மூடப்பட்ட பின்னர் சுமார் இரண்டு ஆண்டுகள் ஈழநாட்டில் ஆசிரியராகவும் பணியாற்றினார். பின்னர் தினபதி ஆரம்பிக்கப்பட்டபோது இவரை தமது சிந்தாமணியின் ஆசிரியராக்கினார் எஸ்.டி.எஸ். ஐயா.

நான் தினபதியில் சேர்ந்த முதல் நாளில் இருந்தே அவருடன் நெருக்கமாகவும் மரியாதையாகவும் பழகினேன். ஈழகேசரியிலும் ஈழநாட்டிலும் இருந்த காலத்தில் மிகச் சூடான - மிகக் கடுப்பான - சீற்றம் கொண்ட - கண்டிப்பான ஆசிரியராக இருந்தார் என்றும், சிந்தாமணியில் அவர் சாந்தமாகவும் மென்மையாகவும் மாறி விட்டார் என்றும் அலுவலகத்தில் என் சீனியர் ரிப்போர்ட்டர்கள் கூறுவர். வேறு தரப்புகள் மூலமும் நான் அதை கேள்விப்பட்டிருந்தேன்.

ஆனால் சிந்தாமணி ஆசிரியராக இருந்த சமயத்திலும், பின்னாள்களில், 1988 இல் சென்னையில் இரண்டு, மூன்று மாதங்கள் பல தடவைகள் நான் அவரைச் சந்தித்துப் பேசிய பழகிய போதும், மிக மென்மையானவராக, அமைதியானவராக, கோபமே வராத, பழுத்த பத்திரிகையாளராகத்தான் நான் அவரைக் கண்டேன்.



சிந்தாமணி ஆசிரியர் இராஜ அரியரத்தினம்

சிவநாயகம் ஐயாவுடன் பணியாற்றிய பண்பியல்போ என்னவோ, 1998 இல் மறைந்த அவரின் கடைசி இரண்டு தசாப்த காலமும் அவரை மிகுந்த மென்மையான, கனிந்த ஒரு மனிதராகவே நான் கண்டேன்.

இளைஞனான என்னை எழுத்துத்துறையில் தூண்டி சுடர்விட வைக்க அவரும் விரும்பினார். வாய்ப்புகளைத் தேடித் தந்தார். பிற்காலத்தில் அவர் சர்ச்சைகளில் சிக்க விரும்பாதவராக இருந்தமையால் போலும் என்னையும் சர்ச்சைகளை ஏற்படுத்தாத கட்டுரைகளையே எழுதத் தூண்டினார். நான் கம்பன் கழகத்துடன் ஈடுபாடு கொண்டவன் என்று கண்டுகொண்ட அவர், அதனால் இலக்கியக் கட்டுரைகளை எழுதவும் தூண்டினார். அந்த நோக்கோடு புத்தகங்களைத் தேடி வாசிக்க வழிப்படுத்தினார். இலக்கியக் கட்டுரைகள் பெரும்பாலும் சர்ச்சையை ஏற்படுத்தா, இலகுவில் வாசகர்களின் கவர்ச்சியைப் பெறலாம் என்ற சாரப்பட எடுத்துரைத்தார். அவரின் அழுத்தம் காரணமாக ஓர் இலக்கியக் கட்டுரையை வடித்தேன். அதன் சாராம்சம் எனக்கு இன்னும் நினைவில் உண்டு.

இயற்கையில் நடக்க முடியாதவற்றை நம் முன் நடத்தி காட்டுபவன் கவிஞன் என்று அக்கட்டுரையில் விவரித்து இருந்தேன் நான். அதன் சாராம்சம் இதுதான்:-

'செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே' என்று பாடினான் பாரதி. தேனின் சுவையை வழமையாக சுவைப்பது நாதான். இங்கு காது நாக்கின் பணியைச் செய்கின்றது.

'கண்ணொடு கண்ணினைக் கவ்வி ஒன்றையொன்று உண்ணவும் நிலை பெறாது உணர்வும் ஒன்றிட அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்' என்றான் மகாகவி கம்பன். இங்கு கண் வாயின் தொழிலைச் செய்கின்றது. கவ்வுகிறது. ஒன்றோடொன்று உண்ணுகிறது.

'பெண்ணியலார் எல்லாம் கண்ணில் பொதுஉண்பர் நண்ணேன் பரத்தநின் மார்பு' - என்று கற்பியலில் செந்நாப் போதகர் திருவள்ளுவர் கூறுவார். பரந்த, அகன்ற, பரத்தை போன்ற உனது மார்பை பெண் இயல்புடையவர்கள் பொதுப் பொருளாகக் கருதி கண்ணால் உண்பர் என்கிறாள் தலைவி என்பது இதன் அர்த்தம். இங்கும் கண் கவ்வுகின்றது, வாயின் தொழிலைச் செய்கின்றது.

இப்படி பாரதி, திருவள்ளுவர், கம்பன் படைத்த சில அடிகளைக் கொடுத்து, இயற்கையில் நடக்க முடியாத வற்றைக் கவிஞர்கள் புனைந்து காட்டுகின்றமையை விரிவாக அக்கட்டுரையில் நான் சிலாகித்திருந்தேன்.

சிந்தாமணி ஆசிரியர் இராஜ அரியரத்தினத்துக்கு அந்தக் கட்டுரை நன்கு பிடித்துப் போய்விட்டது. ஓவியர் சாமியைக் கொண்டு மூன்று இலக்கிய காட்சிகளையும் படமாக வரைந்து, முக்கியத்துவம் கொடுத்து, அந்த சிந்தாமணியில் அதனைப் பிரசுரிக்க ஏற்பாடு செய்தார்.

தொடர்ந்து இலக்கியக் கட்டுரைகளை எழுதுவதற்கென்றே ஒரு புனை பெயரைத் தேர்ந்து தாருங்கள் என்றார் இராஜ அரியரத்தினம். அந்த இளம் வயதில், சொந்தப் பெயரில் அந்தக் கட்டுரை வருவதுதான் எனக்கு விருப்பமாக இருந்தது. ஆனால் சிந்தாமணி ஆசிரியரோ புனைபெயர் கேட்கின்றாரே, என்ன செய்வது என்று யோசித்தேன். சொந்தப் பெயரையே புனை பெயராக மாற்றிக் கொடுக்கலாம் என்று மனம் யோசித்தது.

'வித்தியாதரன்' என்ற எனது பெயரில் 'வித்தியா'வில் இருக்கும் முதல் எழுத்தான 'வி'யைக் கடைசியாக உள்ள 'தரன்' என்பதுடன் சேர்த்து 'விதரன்' என்ற புனை பெயரைக் கொடுத்தேன்.

கட்டுரை அட்டகாசமாகப் பிரசுரமாகியிருந்தது. நானே பத்துப் பதினைந்து சிந்தாமணிப் பிரதிகளை வாங்கி நண்பர்களுக்கெல்லாம் சேர்ப்பித்தேன். இலக்கியக் கட்டுரை எழுதும் தகுதி உடையவன் என்று ஒரு சின்ன செருக்குக் கூட வந்துவிட்டது.

அடுத்த நாள் திங்கட்கிழமை காலையில் அலுவலகத்திற்குப் போனேன். செய்தியாளர்கள் மேசையில் என் சீனியர்கள் சில பேருக்கு 'காய்ச்சல்'. 'சிந்தாமணி ஆரம்' பகுதியில் பிரதான கட்டுரையாக 'சிறு பொடியனான' என் இலக்கியப் படைப்பு வெளிவந்தது அவர்களுக்கு கொஞ்சம் எரிச்சலாக இருப்பதை நான் புரிந்து கொண்டேன். மதியம் போல சிந்தாமணி ஆசிரியரைச் சந்தித்தேன். "ஆசிரியரும் (சிவநாயகமும்) உங்கள் கட்டுரையைப் பாராட்டினார். எளிமையான, ஆற்றொழுக்கான நடை. நல்ல தேடல் என்றார். இக்கட்டுரைத் தொடர்பாக உம்மை ஒரு தடவை தன்னை வந்து சந்திக்கும்படி கூறினார். ஆசிரியரைப் போய்க் காணும்" - என்றார் அவர்.

நான் ஆசிரியர் சிவநாயகம் ஐயாவின் அறைக்கு சென்றேன். அவர் ஒரு புன்னகையுடன் வரவேற்றார். அந்த புன்னகையில் ஒரு நக்கல்,நளினம் இருந்தமையை நான் அவதானித்தேன். அந்த இலக்கியக் கட்டுரையின் தலைப்பைச் சொல்லி அதனை வரைந்தவர் நீரா என்று கேட்டார்.

"நல்ல கற்பனை வளம். நல்ல தேடல். முறையாகக் கோர்த்துள்ளீர்கள். நானும் அதனை சுவைத்தேன்." - என்று பிரமாதமான பாராட்டு. கடைசியில் விடயத்திற்கு வந்தார்.

"இவ்வளவு இலக்கிய அறிவு கொண்ட நீங்கள் புனைபெயர் வைப்பதிலும் சற்று இலக்கிய பூர்வமாக சிந்தித்து இருக்க வேண்டுமே!" - என்றார்.

நான் ஏன் விதரன் என்ற பெயரை தேர்ந்தெடுத்தேன் என்ற விளக்கத்தைக் கூறினேன். ஆறுதலாகச் செவி மடுத்த அவர் திரும்ப ஒரு கேள்வியை கேட்டார்.

"சரி அந்த 'விதரன்' என்ற பெயருக்கு என்ன அர்த்தம் தெரியுமா?" - என்று வினாவினார். நான் முழுசினேன்.

"இலக்கிய நயத்துடன் கட்டுரை எழுதுபவருக்குக் கொஞ்சம் தமிழ் தெரிந்திருக்க வேண்டாமா?" - என்று கேட்டார்.

"உமது புனைப் பெயரான 'விதரன்' என்ற சொல்லுக்கு அர்த்தம் 'தபுதாரன்' என்பதுதான். மனைவியை இழந்தவன் என்று கருத்து. விதவன் என்பது விதவையின் ஆண்பால் சொல். அதுவே விதரன் என்றாகும்" - என விளங்கப்படுத்தினார் ஐயா.

அத்தோடு 'விதரன்' என்ற புனைபெயரையும் கைவிட்டேன். ஏனோ இலக்கியக் கட்டுரைகளை எழுதும் நாட்டமும் அத்தோடு அடங்கிப் போய்விட்டது.

எனினும் 2009 ஜனவரியில் - நான் கடத்தப்பட்டு அந்தக் கடத்தல் கைதாக மாற்றப்படுவதற்கு சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு - இலங்கையின் மோசமான யுத்த நிலைமை குறித்து பரபரப்பான தகவல்கள் அடங்கிய ஒரு கட்டுரையை அப்போது ஆனந்த விகடனில் ஆசிரியராக இருந்த எனது நண்பன் அசோகன் (அதே நிறுவனத்தில் 1988 இல் என்னுடன் பணிபுரிந்தவர்) கேட்டுக் கொண்டமைக்கு அமைய எழுதி அனுப்பியிருந்தேன். என் பாதுகாப்புக் கருதியோ என்னவோ என் சொந்தப் பெயரில் அதைப் பிரசுரிக்காமல் 'வித்தியாதரன்' என்ற என் பெயரை முன்னர் நான் சுருக்கிய மாதிரி 'விதரன்' என்று சுருக்கிக் குறிப்பிட்டு, அவர் விகடனில் பிரசுரித்தமையை நான் அவதானித்தேன். என் தொடர்பில் அப்படித் தீர்மானிக்கும் நட்புரிமை அவருக்கு இருந்தது. அதனால் அப்படிச் செய்து இருப்பார் என்று நினைக்கிறேன். அத்தோடு அந்தப் புனைபெயரையும் கைவிட்டு விட்டேன் நான்.

(வளரும்....)



அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 140

### 372. புலிகளின் இந்தப் போக்கை இந்தியா எப்படிப் பார்த்தது?

ஓர் இனப்படுகொலையின் ஆரம்ப உத்திகள் ஏற்படுகின்றன எனக் கணித்து அதனை முளையிலேயே கிள்ளிவிட நினைத்த இந்திரா காந்தி, அதைத் தொடர்ந்து உணவுப் பொட்டலங்களை வானில் இருந்து போட்டு ஜே. ஆரை பணிய வைத்து ஒப்பந்தம் ஏற்படுத்திய ராஜிவ் காந்தி ஆகியோர் உள்நாட்டுப் பிரச்சினைகளில் தலையீடு செய்கிறார்கள் என சர்வதேசத்துக்கு சாணி அடித்து, ஐ.நாவிற்கும் சமர்ப்பணங்கள் செய்தால், அதனை இந்தியத் தலைவர்கள் - அவர்கள் எந்தக் கட்சியின் சார்பில் அரசு செய்தாலும் - எப்படி கணிப்பார்கள்?

அந்த கணிப்புத்தான் வி.பி.சிங், ராஜ்ஜைவ அடுத்துப் பிரதமரானதும் ஏற்பட்டது. அவர் இந்தியாவிற்கு எதிரான பிரசாரங்கள் தொடர்வதை விரும்பவில்லை. ராஜிவ் காந்தியின் அளவுக்கு தமிழ் மக்கள் மேல் கரிசனையும் அவருக்கு இருக்கவில்லை. இந்திய படைகள் வெளியேறும் என்று வி.பி.சிங் அறிவித்து, கருணாநிதியை ஈ.பி.ஆர்.எல்.எவ்க்கும் விடுதலைப் புலிகளுக்கும் மாகாண சபையை ஒட்டிய மட்டில் இணைந்து செயற்பட பேச்சுவார்த்தைகள் நடத்தக் கேட்டார். பாலசிங்கம் கருணாநிதி ஊடாக வி.பி.சிங்கை இந்தியப் படைகள் முழுவதையும் ஒரேயடியாக மீளப் பெறாமல் பகுதி பகுதியாக பிரேமதாஸாவுடனான பேச்சுக்கள் முடியுமட்டும் வைத்திருக்கக் கோரினார். வி.பி.சிங் அதை நீங்கள் கவனித்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி முழுமையான மீளப்பெறுதலுக்கே உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.



சிங்கள இனவாத ஆளும் வர்க்க அரசுகளோடு பேசிப் பேசி, இணக்கங்கள் கண்டு, அவை எதுவுமே நடைமுறைப்படுத்தப்படாது ஏமாற்றங்களைச் சந்தித்து, மேலும் அடக்கு முறைகளை அனுபவித்த போதுதான் தமிழ் மக்கள் சர்வதேசத்துக்கு அறைகூவல் வைத்தார்கள். விடுதலைப் புலிகள் உருவாவதற்கு முன்னைய காலங்களிலிருந்தே தமிழ்த் தேசியத் தலைவர்கள் எல்லோரும் படிகள் ஏறி மாநிலத் தலைவர்களையும், இந்திய மத்திய அரசினதும் உதவிகளைக் கோரினார்கள். புலம்பெயர்ந்த சமூகத்தில் அர்ப்பணிப்புடன் இயங்கியவர்களும் இந்தியாவிடம் இந்தப் பிரச்சினையில் ஈடுபட்டுத் தமிழர்களுக்கு நியாயம் தேடித் தரவும் தமிழீழம் அமைத்துத் தருமாறும் வேண்டினார்கள். இந்த சர்வதேச ஈடுபாடுகளையும் அவற்றின் அத்திபாரங்களையும் பின்னர் எழுந்து வந்த ஆயுதப் போராளிகளோ அவர்களது முகவர்களோ கணக்கெடுக்கவில்லை. அல்லது விரும்பவில்லை. ஸ்ரீலங்காவை அடக்குவதற்கு இனிமேல் ஆயுதம் ஒன்றுதான் வழி என்றும்,தமிழர் தேசியப் பிரச்சினை இன்று ஆயுதம் தரித்த விடுதலைப் போராட்டமாக விஸ்தாரிப்படைந்து, வளருகிறது என்பதை யாராலும் மறுக்க முடியாது. இந்த ஆயுதப்போர் சிங்கள அரசுக்கும் தமிழ் விடுதலைப் போராளிகளுக்கும் மத்தியிலானது. தமிழ் விடுதலைப் போராளிகளே இன்று தமிழரை பிரதிபலிக்கும் அரசியல் சக்தியாக மக்களின் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லுகிறார்கள். எனவே எதிர்கால தமிழ் அரசியல் வரலாற்றின் கதாநாயகர்கள் அவர்களே,கூட்டணித் தலைவர்களல்லர், என்றார்கள்.



இவற்றால் அந்த அத்திபாரங்கள் அமைத்தவர்களெல்லாம் புறந்தள்ளப்பட்டு, ஆயுதம் தரித்தவர்கள் ஸ்ரீலங்காவை அடக்குவார்கள் என்ற சித்தாந்தத்தில் விடுதலை போராட்டம் வளர்ந்தது.

### 373. இந்தியா தன்னை நிலை நிறுத்தப் பார்த்ததா?

விடுதலைப் புலிகளின் ஆதரவு சக்திகளாக இருந்த தமிழ்நாடு அரசியல்வாதிகள் மூலமும் புலம்பெயர் சமூகத்திலும் ஊக்கம் பெறக் கூடிய அரசியலை வளர்க்கவும், போராட்டத்தை நெறிப்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் விடுதலைப் புலிகளின் தாங்களே ஏகப்பிரதிநிதிகள் என்ற கோட்பாட்டில் மற்றவர்கள் எல்லோரும், துரோகிகளாக்கப்பட்டார்கள். விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வமான ஏடுகளில் அவர்களின் மதியுரைஜர், பாலசிங்கம் இப்படியாக எழுதினார்:-

சிங்கள இனவாத ஆளும் வர்க்கமானது தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதில் எவ்வித அக்கறையும் கொண்டிருக்கவில்லை என்பது எங்களுக்குத் தெரியும். இனப்பிரச்சினையை மேலும் கூர்மையாக்கி, சிங்களப் பேரினவாத சித்தாந்தத்தில் சிங்கள மக்களைச் சிறைப்படுத்தி வைத்து, ஆட்சிப்பீடத்தில் தொடர்ந்து இருப்பதே சிங்கள ஆளும் வர்க்கத்தின் அபிலாஷை. தமிழர் பிரச்சினை மேலோங்கி இருக்கும் வரை சிங்கள இனவாத எழுச்சி, வர்க்க முரண்பாடுகளை மறைத்து, வர்க்கப் போராட்டத்தைத் தணித்து விடும் வரை, முதலாளித்துவ அரச அதிகாரத்துக்கு ஆபத்த ஏற்படாது என்பதை ஆளும் வர்க்கம் நன்கு அறியும். அதனால் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதை அவர்கள் விரும்பப் போவதில்லை.”
- என்றார்.

சிங்கள அரசுகள் தமிழ் மக்களுக்குத் தாமாகவே ஒரு தீர்வைத் தரப்போவதில்லை என்பதை பாலசிங்கம், பிரபாகரன் யாவருமே தெளிவாகத் தெரிந்திருந்தும், சர்வதேசத்தின் அழுத்தம் இன்றி, இந்தியாவின் அனுசரணை இல்லாமல், அது நடக்கப்போவதில்லை என்ற யதார்த்தத்தை அறிந்திருந்தும். அவர்கள் அந்தப் பிள்ளையாரை விலத்து அல்லது ஊர்குருவியில் குகநாதன் எழுதிய கதையில் விவரித்த மாதிரி, இந்தப் பன்றியை வெளியே எடுத்தால், நாங்கள் பார்த்துக் கொள்ளுவோம் என்ற இன்னுமொரு முகத்தில் சர்வதேசத்துக்கும் ஐ.நாவுக்கு செய்திகள் சொல்லப்பட்டன.

ஆகவே இந்தியாவும் தமிழ் மக்கள் தங்களது பிரச்சினைகளைத் தாங்களே பார்த்துக் கொள்ளட்டும் என ஒதுங்கிக் கொண்டது எனவும் பார்க்கலாம். அதன் அடிப்படையில் தங்களது பிராந்திய நலனுக்குத் தேவையான ஏற்பாடுகளில் ஆக்கம் செலுத்தியது.

போர் முடிந்த இந்த 12 வருட காலப் பகுதிகளில் கூட தமிழ் மக்கள் இந்தியாவை அணுகி நட்புறவைப் பேணி வளர்க்கவோ, ஒற்றுமையாக ஒப்பந்தத்தை அதன் முழுமையான சரத்தில் அமுல்படுத்தக் கேட்கவோ, அகதிகளைத் திருப்பி அனுப்ப வேண்டிய ஒழுங்குமுறைகளை ஏற்படுத்துமாறு பேசவோ இல்லை. இந்தியாவுக்கு எதிராக வளர்க்கப்பட்ட அந்தக் கசப்புணர்வுகளை ஆற வைத்து அப்படியான முன்னெடுப்புகள் எடுக்கப்பட்டால் அது சில சமயம் தமது வாக்கு வங்கிகளைத் தாக்கலாம் என்ற அச்சம் கூடச் சிலருக்கு உண்டு.

இவற்றை மேவி சர்வதேச ஓட்டங்களைக் கணக்கெடுத்து அவற்றை நிவர்த்தி செய்யும் பாரிய பொறுப்பு தமிழ் மக்களுக்கு உண்டு.

(வளரும்....)



காலைக்கதிர் Kalaikkathir

# போதையுடனான குடிமக்களை உருவாக்கும் செயலில் அரசு!

## உதயகுமார் எம்.பி. குற்றச்சாட்டு



ஒழுக்கம் – நன்னடத்தை என்பவற்றைப் பேணி நல்ல 'குடிமக்களை' உருவாக்க வேண்டியதற்குப் பதிலாக நாட்டில் கொரோனாத் தொற்று பரவும் காலத்திலும், மதுபானசாலைகளை திறந்து போதையுடனான குடி மக்களை உருவாக்கும், மிக மோசமான செயலில் இந்த அரசாங்கம் ஈடுபட்டுள்ளதைக் காண முடிவதாக நாடாளுமன்ற உறுப்பினர் உதயகுமார் தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்–

கொரோனாத் தொற்று மற்றும் மரணங்கள் சற்று குறைவடைந்து வரும் நிலையில் அரசாங்கத்தின் இந்த பார் திறப்பு தீர்மானம் கொரோனா பார்– மதுபான கொத்தணி ஒன்று உருவாக இடமளித்துள்ளது.

முழு நாடும் முடக்கப்பட்ட நிலையில், வருமானத்தை ஈட்ட பார்களை திறக்க அரசாங்கம் எடுத்த முடிவு மிகவும் கேவலமானது. இந்த லட்சனத்தில், இன்று மதுவரி கட்டளைச் சட்டத்தின் கீழான கட்டளைகளை திருத்த யோசனை முன்வைத்துள்ளது.

இந்த அரசாங்கத்தின், இராஜாங்க அமைச்சர் ஒருவர் அநுராதபுரம் சிறைச்சாலைக்கு குடிபோதையில் சென்று அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை, துப்பாக்கி முனையில் அச்சுறுத்தி உள்ளமையுடன், செய்தி வெளியில் வந்ததும், குறித்த இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து மட்டும் விலகியுள்ளார்.

ஆனாலும், இராஜாங்க அமைச்சரின் இந்த செயற்பாடு தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும். குற்றம் செய்திருந்தால், தக்க நடவடிக்கை எடுத்து, தண்டனை வழங்க வேண்டும். அத்துடன், உயிர் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில், சிறைச்சாலைகளில் எவ்வித வழக்கு விசாரணைகளும் இன்றி பல வருடங்களாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள மலையகம் மற்றும் வடக்கு கிழக்கு உள்ளிட்ட அனைத்து தமிழ் அரசியல் கைதிகள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்.

இன்று நாட்டின் நிலைமையை எடுத்துக் கொண்டால் மூன்று முக்கிய வார்த்தைகள் பிரபல்யம் அடைந்துள்ளன. அதுதான், இல்லை, விலை உயர்வு தட்டுப்பாடு,

**அரிசி இல்லை அல்லது விலை உயர்வு அல்லது தட்டுப்பாடு**

**சீனி இல்லை, விலை உயர்வு, தட்டுப்பாடு,**

**பருப்பு இல்லை விலை உயர்வு, தட்டுப்பாடு,**

**பால் மா இல்லை, விலை உயர்வு, தட்டுப்பாடு,**

**கோதுமை மாவு இல்லை, விலை உயர்வு, தட்டுப்பாடு,**

**காஸ் இல்லை, விலை உயர்வு தட்டுப்பாடு,**

இப்படியாக வரிசை நீண்டு கொண்டே செல்கிறது.

அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்ய மக்கள் திண்டாட்டம் – மதுபானசாலைகளை திறந்து அரசாங்கம் கொண்டாட்டம்.

அத்தியாவசியப் பொருள்கள் பின்கதவு வழியாகவும், மதுபானம் முன்கதவு வழியாகவும் வழங்கப்படுகிறது.

அதாவது, அத்தியாவசியப் பொருள்கள் மறைமுகமாகவும், மதுபானம் நேரடியாகவும் விற்கப்படுகிறது.

இதுதான் நாட்டின் தற்போதைய நிலைமை.

நமது நாட்டுக்கு அந்நிய செலாவணி ஈட்டித்தரும் தேயிலை உற்பத்தித் துறை இன்று மிக மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதுடன், இரசாயன உர இறக்குமதி தடையால் தேயிலை உற்பத்தி பாரிய அளவு குறைவடைந்துள்ளது. இந்த உற்பத்தி குறைவை சமாளிப்பதற்காக 'சிலோன்டி' என்ற தேயிலை தரத்தில் கை வைத்துள்ள அரசாங்கம், கடந்த ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதியில் இருந்து அமுலாகும் வகையில் வெளிநாடுகளில் இருந்து கறுப்புத் தேயிலையை இறக்குமதி செய்து அதில் 30 வீதம் இலங்கை தேயிலையை கலந்து மீள தேயிலை ஏற்றுமதிசெய்ய அனுமதி அளித்துள்ளது. இது தொடர்பான தேயிலை சபையின் சுற்றறிக்கை இங்கு உள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம், தரமற்ற சிலோன் டீ சர்வதேச சந்தைக்குள் செல்ல வாய்ப்புக்கள் உள்ளன. இதனால் 'சிலோன் டீ யின்' தரம் கேள்விக்குறியாக்கப்படும். சர்வதேச சந்தையில் ஒருமுறை நாம் வாய்ப்பை இழந்தால் அதனை மீளப் பெறுவது கடினம்.

உதாரணமாக, 2015 ஆம் ஆண்டு சுமார் 70 கோடி கிலோ தேயிலை கொள்வனவு செய்த ஜப்பான் இன்று படிப்படியாக குறைந்து 20 தொடக்கம் 30 கோடி தேயிலை மாத்திரமே கொள்வனவு செய்கிறது.

சேதன உர முறையில் ஒரு கிலோ கிராம் தேயிலையின் உற்பத்தி செலவு 1,900 ரூபா. இது வழக்கமான தேயிலையின் உற்பத்திச் செலவை விட மூன்று மடங்கு அதிகமாகும். எனவே, அரசாங்கம் எடுத்துள்ள இந்த நடவடிக்கையால் நாட்டின் தேயிலை உற்பத்தியின் எதிர்காலம் பாதிக்கப்படும், தோட்டத் தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புகள் இழக்கப்படும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இரசாயன உர இறக்குமதிக்கு தடை விதித்து அரசாங்கம் தோல்வி கண்டுள்ளது. இந்நிலையில், சீனாவில் இருந்து கொரோனா வைரஸ் வந்தது போதாது என்று, தற்போது உர இறக்குமதி மூலம் புதிய பக்டீரியா வைரஸை கொண்டு வந்துள்ளனர். அதில், பாரதூரமான நோய்களை ஏற்படுத்தக்கூடிய அபாயகரமான இரு பக்டீரியாக்கள் உள்ளடங்கியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அரசாங்கம் நாட்டு மக்களின் உயிர்களுடன் விளையாடி மேலும், அவர்களை ஆபத்தில் தள்ளிவிடப் பார்க்கிறது.

இன்று, நாட்டைப் பொருளாதார சிக்கலில் இருந்து மீட்க இருக்கும் ஒரே வழி சர்வதேச நாணய நிதியமும் – ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையுமாகும். இந்த இரண்டையும் பெறுவதற்கு நமது நாடு தகுதி உடையதாக இருக்க வேண்டும். இது பெரும் சவாலான விடயமாகும். இந்த சலுகைகளை பெறுவதில் பயங்கரவாதத் தடைச் சட்டம் பெரும் தாக்கத்தை செலுத்துகிறது.


நாட்டைப் பொருளாதார சிக்கலில் இருந்து மீட்க அஜித் நிவாட் கப்ரால் பொருத்தமானவர் என்று அவரிடம் மத்திய வங்கி ஆளுநர் பதவியை கொடுத்தால், பதவி ஏற்ற மறுநாளே, அதாவது கடந்த வெள்ளிக்கிழமை 4.595 கோடி ரூபா நாணயத்தாள்களை புதிதாக அச்சிட்டுள்ளார். பணம் அச்சிட்டு பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்று பொருளாதார நிபுணர்கள் கூறியும் அதனை மீறிச் செயற்பட்டுள்ளனர்.

புதிய நிதி அமைச்சர் வந்த பின்பு 'தேனும் பாலும் ஓடும்' என்று நாட்டு மக்கள் ஏமாற்றப்பட்டது போலவே, புதிய மத்திய வங்கி ஆளுநர் நியமனமும் அமைந்துள்ளது. அரசாங்கத்தின் பொருளாதாரத் திட்டங்கள் காரணமாக இன்று அந்நிய செலாவணி குறைந்து நாட்டில் டொலர் பற்றாக்குறை நிலை ஏற்பட்டுள்ளது. அதனால், கையிருப்பில் உள்ள டொலர்களை இறக்குமதிக்கு பயன்விடாது சுமார் 623 பொருள்களுக்கு உத்தரவாதத் தொகை அல்லது வைப்பு தொகை முறை மூலம் இறக்குமதி கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. இந்த இறக்குமதி கட்டுப்பாட்டுத் தடையால் உள்நாட்டில் பொருள்களின் விலை அதிகரித்துள்ளது.

எனவே, இந்த அரசாங்கத்துக்கு நாட்டைத் திறம்பட ஆட்சி செய்ய முடியாது என்பது இதன்மூலம் தெளிவாகிறது. அதனால். தங்களது இயலாமையை ஏற்றுக் கொண்டு வீட்டுக்கு செல்வதே இந்த அரசாங்கம் எடுக்கக் கூடிய பொருத்தமான தீர்மானமாக இருக்கும். – என்று தெரிவித்தார்.

# மதுபானசாலைகள் திறக்கப்பட்டமை தொடர்பில் வெளியிடப்படும் கருத்துக்கள் வெறுக்கத்தக்கவை

## ஓமல்பே சோபித தேரர் காட்டம்



மதுபானசாலைகள் திறக்கப்பட்டமை தொடர்பில் ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் குறிப்பிடும் கருத்துக்கள் வெறுக்கத்தக்கவை என ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

எம்பிலிபிட்டிய பகுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்–

மதுபானப் பாவனைக்கு கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்திய அநாகரிக தர்மபாலவை அவமதிக்கும் வகையில் அவரது பிறந்த நாளன்று மதுபானசாலைகளைத் திறக்க அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

நாட்டு மக்கள் கொவிட் தாக்கத்துக்கு மத்தியில் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ள நிலையில், மதுபானசாலைகளை அரசாங்கம் திறக்க தீர்மானித்துள்ளமை முற்றிலும் தவறான செயற்பாடாகும். அரசாங்கத்துக்கு குறைந்தபட்ச ஒழுக்கமேனும் உள்ளதா என்று கேட்கத் தோன்றுகிறது.

மதுபானப் பாவனை மற்றும் புகைப்பிடித்தல் பழக்கம் உள்ளவர்களுக்கு கொவிட்–19 வைரஸ் இலகுவில் தொற்றும் என்று குறிப்பிடும் பட்சத்தில் மதுபானசாலைகளை திறக்க அனுமதி வழங்கியுள்ளமை அரசாங்கம் மக்கள் மீது கொண்டுள்ள அக்கறையின்மையை வெளிப்படுத்துகிறது.

இனிவரும் காலங்களில் சிறந்த அரசாங்கம் ஒன்று தோற்றம் பெற வேண்டுமாயின் முதலில் பெரும்பான்மையின மக்கள் அரசியல் மற்றும் சமூக ரீதியில் தெளிவு பெற வேண்டும். – என்றார்.

# கொவிட்டிலிருந்து குணமடைந்தோருக்கு நரம்பியல் நோய் அறிகுறிகள் உள்ளன

கொவிட்டில் இருந்து மீண்டவர்களில் 3 வீதம் முதல் 40 வீதம் வரை நரம்பியல் நோய் அறிகுறிகளை உருவாக்கும் அபாயம் இருப்பதாக நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

நரம்பியல் நோய் நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் வைத்தியர் காமினி பத்திரண, நரம்பியல் நோய் அறிகுறிகள் கடுமையாக இருந்தால் மருத்துவரை நாடுவது மிகவும் முக்கியம் என்று கூறினார்.

வைத்திய நிபுணர் காமினி பத்திரண மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

சமூகத்தில் கொரோனாத் தொற்றில் இருந்து குணமடைந்த ஏராளமானோர் உள்ளனர். அவர்களுக்கு இந்த நோய் அறிகுறிகள் வந்தால் அறிந்துகொள்வதற்காக இதனைத் தெரிவிக்கின்றோம்.

இந்த அறிகுறிகளைப் பற்றி கேட்டு அச்சப்படத் தேவையில்லை. பெல்ஸ் ஃபால்ஸ் என்ற நோய் பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்கும். முகத்தின் ஒரு பக்கம் உணர்ச்சியற்றதாக மாறும். இந்த நாள்களில் இது மிகவும் அதிகரித்துள்ளது. கொவிட் –19 காரணமாக இது ஏற்படுகின்றதா என்று சந்தேகம் எழுந்துள்ளது. கொரோ னாவில் இருந்து குணமடைந்தவர்களில் 3 வீதம் முதல் 40 வீதம் வரை நரம்பியல் நோய் அறிகுறிகள் ஏற்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது. – என்றார்.

# கொவிட் பற்றிய ஆலோசனைகளுக்கு 247 என்ற இலக்கத்தை அழைக்குக

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு, மருத்துவ ஆலோசனை தேவைப்படுபவர்கள், எந்த நேரத்திலும் 247 என்ற தொலைபேசி இலக்கத்தை அழைத்து மருத்துவர் ஒருவரை தொடர்பு கொள்ளலாம் என கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பேராசிரியர் இந்திக கருணாதிலக தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், குறித்த தொலைபேசி இலக்கத்தின் ஊடாக மருத்துவரைத் தொடர்பு கொண்டதன் பின்னர், நோயாளியின் நோய் நிலைக்கு ஏற்ப அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பாதுகாப்புப் படைக்கு தண்டனை விலக்கு வழங்க ஐ.நாவின் ஒப்புதலை ஜனாதிபதி எதிர்பார்க்கிறாரா?

## கஜேந்திரகுமார் எம்.பி. காட்டத்துடன் கேள்வி

ஐ.நா. பொதுச் சபையின் கூட்டத்தொடரில் கலந்து கொள்வதற்காக நியூயோர்க் நகருக்குச் சென்றிருக்கும் சிறிலங்கா ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, கடந்த ஞாயிறன்று ஐ.நா. செயலாளர் நாயகம் அன்டனியோ குட்ரெஸ்ஸை சந்தித்தார். அச்சந்திப்பின் பின்னர் அவர் வெளியிட்ட கருத்துகளுக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் கருத்துகளுக்கு தனது பலத்த கண்டனத்தை நாடாளுமன்றத்தில் வெளியிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவித்தவை வருமாறு -

கடந்த ஞாயிறன்று ஐ.நா. பொதுச்செயலாளரைச் சந்தித்த பின்னர் ஜனாதிபதி வெளியிட்ட கருத்துக்கள் பற்றி வெளிநாட்டமைச்சு ஓர் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி, இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினைகளை உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையினூடாகத் தீர்த்துக்கொள்ள முடியும் எனவும் இது தொடர்பில் பேச்சு நடத்துவதற்கு புலம்பெயர்ந்த நாடுகளிலுள்ள தமிழ் அமைப்புகளுக்கும் அழைப்புவிடுக்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி நியூயோர்க் நகருக்குச் சென்று இதனைத் தெரிவித்திருக்கின்றமை எனக்கு வேடிக்கையானதாகத் தெரிகிறது. ஏனெனில், இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த சில தினங்களிலேயே புலம்பெயர் நாடுகளில் செயற்படும் பல தமிழ் அமைப்புகளை சட்டவிரோத அமைப்புகளாக அல்லது தடைசெய்யப்பட்ட அமைப்புகளாகப் பட்டியிலிட்டிருப்பதாக அறிவித்தது. அது மட்டுமல்லாமல் புலம்பெயர் சமூகத்தில் நன்கு மதிக்கப்படும் பல தனிநபர்களை, குறிப்பாக இவ்வாறான பேச்சுகளில் பங்குபற்றுவதற்குத் தகுதிவாய்ந்தவர்களும் இப்பட்டியலில் இணைக்கப்பட்டனர். எதிர்காலத்தில் அர்த்தபூர்வமான பேச்சுகள் எதுவும் நடைபெறமால் பார்த்துக் கொள்வதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பதவிக்கு வந்து சில நாள்களில் இந்நடவடிக்கையை மேற்கொண்ட அரசாங்கம் இப்போது நியுயோர்க்குக்குச் சென்று இவ்வாறு தெரிவிப்பது எவ்வித அர்த்தமுமற்ற வெற்றுவார்த்தைகளாகவே தென்படுகிறது.

அது மட்டுமல்ல, காணமற்போனவர்கள் இறந்துவிட்டனர் எனவும் மரணச் சான்றிதழ்கள் வழங்கப்படும் எனவும், இந் நடவடிக்கை துரிதப்படுத்தப்படும் எனவும் அவர் கூறியிருக்கிறார்.

அது எந்த நடவடிக்கை? நியூயோர்க்குக்குச் செல்வதற்கு முன்னர், பழையவற்றை மறந்து விடுங்கள். உங்களுடைய அன்புக்குரியவர்களை தேடுவதில் காலத்தை வீணடிக்காதீர்கள் என்று காணமற்போனவர்களின் உறவினர்களுக்கும், அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிற அமைப்புகளுக்கும் தெனாவட்டுடன் கூறியிருக்கிறார்.

அவ்வாறாயின் இப்போது என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார்? காணாமற் போனவர்கள் என்ன காரணங்களுக்காக பாதுகாப்புப்படையினரால் கொல்லப்பட்டார்கள்? என்பதை விசாரிக்காமல், வெறுமனே மரணச் சான்றிதழ்களை விநியோகிக்கப் போகிறார். இவ்வாறு பாதுகாப்புப் படைகளுக்கு தண்டனை விலக்கு வழங்கும் நடவடிக்கைக்கு ஐக்கியநாடுகள் சபை ஒப்புதல் வழங்க வேண்டும் என ஜனாதிபதி எதிர்பார்க்கிறார். இந்நடவடிக்கைக்கு ஐக்கிய நாடுகள் சபை ஆதரவு வழங்குமேயானால், அதனை எந்தவித தயக்கமுமின்றி பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் நாம் எதிர்ப்புத் தெரிவிப்போம். ஏனெனில் இது ஐ.நா. சபையின் எல்லாவிதமான கொள்கைகளுக்கும் முரணானது. அவ்வாறு ஐ.நா.சபை நடந்துகொள்ளுமேயானால் இது வரலாற்றில் தவறானதாகவே பதியப்படவேண்டியது.

தமிழ் அரசியற் கைதிகளை விடுவிப்பது தொடர்பிலும் ஜனாதிபதி கருத்து வெளியிட்டிருக்கிறார். தாம் ஆட்சிக்கு வந்த சில நாள்களில் ஒரு தொகையானவர்களை விடுவித்திருக்கிறார் எனவும், மீதமுள்ளவர்கள் விரைவில் விடுவிக்கப்படுவர் எனவும் தெரிவித்திருக்கிறார்.

இவ்வாறு விடுவிக்கப்பட்டவர்கள் அனைவரும் ஒரு வருடத்துக்குள் விடுதலையாக இருந்தவர்களே. இதில் வழமைக்கு மாறாக சிறப்பாக எதனையும் அவர்செய்யவில்லை. உயர் நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப்பட்ட அவரது சகா ஒருவரை மன்னிப்பளித்து விடுவிப்பதற்காக, சில தமிழ்ப் பெயர்களையும் இணைத்து அவர்களும் விடுவிக்கப்பட்டார்கள். ஆனால், அவர்கள் தண்டனை அனுபவித்து வந்தவர்கள், ஒரு வருடகாலத்தில் விடுதலையாக இருந்தவர்கள். அதுதான் உண்மை. அனைத்துலக அரங்கத்தில் தங்களுக்கு மதிப்பை ஏற்படுத்துவதற்காக இவ்விதமான அறிக்கை விடுக்கப்பட்டிருந்தாலும் இவை வெறுமையான அறிவிப்புகளே.

இத்தாலியிலுள்ள பொலொனிய நகரத்தில் நடைபெற்ற ஜீ20 நாடுகளின் சர்வமத மாநாட்டில், வெளிவிவகார கொள்கை தொடர்பாக உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் ஜி .எல். பீரீஸ், ஜனாதிபதியின் அறிவிப்புகளை மிஞ்சும் வகையில் நடந்திருக்கிறார். முன்னர் நான் சட்ட மாணவனாக இருந்த காலத்தில் இவர் எழுதிய புத்தகங்களை படித்திருக்கிறேன். இவர் அரசியலுக்கு வருமுன்னர் எனக்கு இவர் மீது மிகுந்த மரியாதையிருந்தது. ஆனால். துரதிர்ஷ்டவசமாக அரசியலுக்கு வந்த பின்னர் அவர்மீது வைத்திருந்த மதிப்புப் போய்விட்டது.

வெளிவிவகார அமைச்சர் ஜி எல் பீரீஸ் 'எமது நாடுகளில் இனம், மதம் சார்ந்து செயற்படும் அரசியல் கட்சிகள் வெளிவிவகாரக் கொள்கைகளை உருவாக்குவதற்கு சிக்கலாக அமைந்துள்ளன எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

தத்தம் இனம் சார்ந்து, மதம் சார்ந்து செயற்படுவதாக இக்கட்சிகள் கூறுகின்றமை நல்லசிந்தனை என தான் நினைக்கவில்லை என்றும் தன்னுடைய கருத்தில் இவை நாட்டுக்குப் பாதகமாகவே அமைந்துள்ளன எனவும் கூறியிருக்கிறார். தனது சொந்தநாட்டில், முஸ்லிம், தமிழ் உறுப்பினர்கள் தேசிய அரசியற் கட்சிகளில் முக்கிய இடத்தை பெற்றிருக்கிறார்கள் என்றும் கூறியிருக்கிறார்.



ஆனால் இந்நாட்டில் பெரும்பான்மையான தமிழர்களும், முஸ்லிம்களும் தங்களுடைய இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளையே தெரிவு செய்கிறார்கள். ஏனெனில் அவர்களுக்கு இந்தத் தேசியக்கட்சிகளில் எந்த நம்பிக்கையும் கிடையாது. உங்களது கட்சிகளில் ஓரிரு தனிநபர்களை வைத்துக் கொண்டு தமிழர்களும், முஸ்லிம்களும் உங்களுடைய பக்கம் இருக்கின்றனர் எனக் கூறமுடியாது. இது ஒரு நேர்மையற்ற கூற்று. மதிப்புக்குரிய ஒரு கல்வியாளராக பேராசிரியர் பீரிஸ் இவ்வாறான கருத்துக்களை வெளியிடுகின்றமை அவரது நேர்மையற்ற தன்மையையே வெளிப்படுத்துகிறது. ஒரு கல்வியாளராக முன்னர் பெருமதிப்புடன் இருந்த ஒருவர் இப்படிக் கூறுகின்றமை ஒரு துர்ப்பாக்கியமான நிலைமை .

அதுமட்டுமல்ல, இப்படிக் கூறுவதன் மூலம் அவர் வேண்டுமென்றே சில விடயங்களை மறைக்க முற்படுகின்றார். அவர் இப்போது இருக்கின்ற கட்சியும் (பொது ஜன பெரமுன), அவர் முன்னர் அங்கம் வகித்த கட்சியும் (சுதந்திரக் கட்சி) இலங்கை தனித்து சிங்களவருக்கு உரியது என்று கூறியதன் மூலம் இந்நாடு இனத்துவ அடிப்படையில் பிரிவுகள் வளர்வதற்கு காரணமாக அமைந்தது. சிங்கள மக்களது வாக்குகளால் மட்டுமே தான் தெரிவுசெய்யப்பட்டேன் என ஜனாதிபதி கூறுகிறார்.

இவ்வாறு பிரிவினைக் கருத்துகள் ஜனாதிபதியிடமிருந்தும், வெளிவிவகார அமைச்சரிடமிருந்தும் வெளிவரும்போது, அனைத்துலக அரங்குகளுக்குச் சென்று வேறுவிதமாகக் கூறுகின்றமை, அவர்களைத் தவறாக வழிநடத்துவது வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டியது. இந்தச் சபையின் கவனத்துக்கு இவை கொண்டு வரப்படவேண்டும். - என்றார்.

# மட்டக்களப்பில் தடுப்பூசியை பெற ஆர்வம் காட்டும் இளம் வயதினர்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி ஏற்றப் பட்டுவரும் நிலையில் பெருமளவான இளைஞர் யுவதிகள் ஆர்வத்துடன் தடுப்பூசிகளை ஏற்றிவருகின்றனர்.

மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட பல பகுதிகளில் நேற்று (வியாழக்கிழமை) தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. மட்டக்களப்பு கூழாவடி விக்னேஸ்வரா திருத்தொண்டர் மண்டபத்தில் நேற்று 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நாகலிங்கம் மயூரனின் வழிகாட்டலின் கீழ் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கிரிசுதனின் தலைமையில் இந்தத் தடுப்பூசி ஏற்றும்பணி நடத்தப்பட்டது.

நேற்று மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட புதூர் விக்னேஸ்வரா வித்தியாலயம்,மட்டக்கள்பபு இந்துக்கல்லூரி, கல்லடி சிவானந்தா வித்தியாலயம் ஆகிய பகுதிகளிலும் 20வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன. பெருமளவான இளைஞர் யுவதிகள் நேற்றைய தினம் தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்வதற்கு ஆர்வத்துடன் கலந்துகொண்டமையை காணமுடிந்தது.

அத்தோடு இதுவரையில் எந்த தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளாத மற்றும் இரண்டாம் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாத 30வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன.

# இலங்கை மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர்களுக்கு இடையில் சந்திப்பு!



இலங்கை மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர்களுக்கு இடையில் நியூயோர்க்கில் சந்திப்பொன்று நடைபெற்றது.

ஐக்கிய நாடுகளின் பொது சபைக்கூட்டம் அமெரிக்காவில் இடம்பெற்று வருகிறது.

இந்த நிலையில் அதில் கலந்துகொள்வதற்காகச் சென்றுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் மற்றும் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் ஆகியோரிடையே இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இலங்கை - இந்திய உறவு தொடர்பாக இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டதாக, எஸ். ஜெய்சங்கர் தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

இரண்டுநாடுகளும் பகிரப்பட்ட நிகழ்ச்சிநிரல்களுக்கு அமைவாக ஒன்றித்து செயற்படுவது தொடர்பாகவும் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

# நாட்டை முழுமையாக திறக்க வேண்டாம் சுகாதார அதிகாரிகள் மீண்டும் வலியுறுத்து

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவை நீக்கும் முடிவை எடுக்கும்போது நாட்டை முழுமையாகத் திறக்க வேண்டாம் என்று சுகாதார அதிகாரிகள் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளனர்.

சுகாதார சேவைகளின் பிரதிப் பணிப்பாளர் ஜெனரல் வைத்தியர் ஹேமந்த ஹேரத் நேற்று (வியாழக் கிழமை) ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டை முழுமையாக ஒரே நேரத்தில் திறக்க பரிந்துரைக்கப்படவில்லை என்றும் நாடு முழுமையாகத் திறக்கப்படுமானால், நிலைமையை இன்னும் மோசமாக்கும் ஓட்டைகள் இருக்கலாம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

எனவே, படிப்படியாக நாட்டைத் திறப்பது மிகவும் பொருத்தமானது என்றும் இதனால் கொரோனா பரவலுக்கு வழிவகுக்கும் காரணிகள் உள்ளனவா என்று நாம் பார்க்க முடியும் எனவும் அவர் மேலும் கூறினார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# கூட்டமைப்பினர் கடும் கண்டனம்



(ந.லோகதயாளன்)

யாழ்., நல்லூரில் தியாக தீபம் திலீபனை நினைவேந்திய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டமையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கின்றது என அதன் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நினைவேந்தலைத் தடை செய்ய முடியாது. அதேபோன்று நினைவேந்தலுக்கு நீதிமன்றத்தினூடாகத் தடைகளும் விதிக்க முடியாது.

எந்தவொரு அத்துமீறலும் இன்றி, மக்கள் கூட்டம் இன்றி, கொரோனா பாதுகாப்பு மீறல் இன்றி ஓர் மக்கள் பிரதிநிதி மேற்கொண்ட நினைவேந்தலை பொலிஸார் கையாண்ட விதம் மிகவும் பாரதூரமானது.

கஜேந்திரன் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்று தெரிந்தும் ஒரு சாதாரண மனிதனுக்கு வழங்க வேண் டிய கௌரவத்தையேனும் வழங்காது அவரை இழுத்துச் சென்று வாகனத்தில் ஏற்றி குற்றவாளியைக் கொண்டு செல்வது போன்று பொலிஸார் கொண்டு சென்றனர்.

இதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றது - என்றார்.

# திலீபனின் நினைவேந்தலுக்கு இன்று முதல் நீதிமன்றம் தடை

## யாழ். நீதிமன்றம் உத்தரவு

**(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)**

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 24

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வை நடத்துவதற்கு இன்று முதல் தடை உத்தரவு வழங்கி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

நேற்று பிற்பகல் இந்தத் தடை உத்தரவு பொலிஸாரால் பெறப்பட்டுள்ளது.

யாழ்., நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீ பனின் நினைவிடத்தில், எதிர்வரும் 26ஆம் திகதி நடத்த ஏற்பாடாகியுள்ள 34ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுக்கு தடை விதித்து உத்தரவிடுமாறு யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸாரினால் நீதிமன்றில் விண்ணப்பம் செய்யப்பட்டது.

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் தடை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர் திலீபனை நினைவுகூரும் நிகழ்வு நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது எனத் தகவல் கிடைத்துள்ளது எனவும், நாட்டில் நிலவும் கொரோனா பரவல் காரணமாக நடைமுறையில் தனிமைப்படுத்தல் சட்டத்துக்கு அமைய நிகழ்வை நடத்த முடியாத காரணத்தால் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுக்குத் தடை விதிக்க வேண்டும் எனவும் பொலிஸாரால் நீதிமன்றில் விண்ணப்பம் செய்யப்பட்டது.

பொலிஸாரின் விண்ணப்பத்தை ஏற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் தடைக் கட்டளை வழங்கியது.

எனினும், இன்று முதல் எதிர்வரும் 26ஆம் திகதி வரை வழங்கப்பட்டுள்ள இந்தத் தடைக் கட்டளையில் எவரது பெயரும் குறிப்பிடப்படவில்லை.

# பாடசாலை எப்போது திறக்கப்படும்? இன்று வெளியாகவுள்ள அறிவிப்பு

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக மூடப்பட்டிருக்கின்ற பாடசாலைகளை மீளத்திறப்பது குறித்த அறிவிப்பு இன்று வெளிவரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இது தொடர்பில் கல்வி அமைச்சின் அதிகாரிகள் அவதானம் செலுத்தியுள்ளதோடு, நாளை பாடசாலைகளை மீளத் திறப்பது பற்றிய தெளிவுபடுத்தல்கள் இடம்பெறவுள்ளன என அறியமுடிகின்றது.

எவ்வாறாயினும் நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளை கட்டம் கட்டமாகத் திறப்பதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதற்கான பரிந்துரையும் வழிகாட்டலும் அடங்கிய அறிக்கை கடந்த வாரம் கல்வி அமைச்சிடம் சுகாதார அமைச்சு கையளித்திருந்தது.

இந்தநிலையில், இன்று கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தனவால் பாடசாலைகள் திறக்கப்படும் தினம் தொடர்பான அறிவிப்பு வெளிவரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# வவுனியாவில் மேலும் மரணம்

வவுனியா மாவட்டத்தில் மேலும் 94 பேருக் குக் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ள துடன், 2 பேர் மரணமடைந்துள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளின் முடிவுகள் சில நேற்று காலை வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கொரோனாத் தொற்றுப் பரவல் அடைந்துள்ள நிலையில் மேலும் 94 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களை கொரோனா சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களை தனிமைப் படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வவுனியாவில் மேலும் 2 பேர் மரணமடைந்துள்ளனர்.

சாந்தசோலைப் பகுதியில் பெண் ஒருவரும் (வயது 58), தவசிகுளம் பகுதியில் பெண் ஒருவரும் இவ்வாறு மரணமடைந்துள்ளனர்.

மரணமடைந்தவர்களின் சடலங்களை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்வதற்குரிய நடவடிக்கைகளை சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர்.

# நொச்சிகுளம் கிராமம் மிக அபாய கட்டத்தில்

## தொற்றாளர் எண்ணிக்கை அதிகரிப்பு

(வவுனியா நிருபர்)

சுகாதார விதிமுறைகளை மீறி ஆலய கும்பாவிசேகம் இடம்பெற்ற ஓமந்தை, நொச்சிகுளம் கிராமத்தில் கொரோனாத் தொற்றாளர்கள் வேகமாக அதிகரித்து வரும் நிலையில் இந்தக் கிராமம் மிகவும் அபாய நிலையில் காணப்படுகின்றது எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, ஓமந்தை, நொச்சிக்குளம் சித்தி விநாயகர் ஆலயத்தில் சுகாதார அறிவுறுத்தல்களை மீறி இடம்பெற்ற குப்பாபிசேக நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்கு மேற்கொண்ட அன்டிஜன் பரிசோதனையில் 13 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக கடந்த சில நாள்களுக்கு முன்னர் இனங்காணப்பட்டனர்.

இதையடுத்து குறித்த 13 தொற்றாளர்களுடன் தொடர்புடைய ஆலயம் மற்றும் 30 வீடுகள் சுகாதாரப் பிரிவினரால் தனிமைப்படுத்தப்பட்டன. தனிமைப் படுத்தப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் நேற்று வெளியாகிய நிலையில் மேலும் 25 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த கிராமத்தில் சுமார் 100 பேர் வரையிலேயே வசித்து வரும் நிலையில், 38 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்னர். இதனால் கொரோனா அச்சுறுத்தல் மிக்கதாக குறித்த கிராமம் மாறியுள்ளதால் மக்கள் சுகாதார நடைமுறைகளைப் பேணி அவதானமாக இருக்குமாறும் சுகாதாரப் பிரிவினர் கோரியுள்ளனர். (100)

## திலீபன் நினைவிடத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிற்பகல் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட மூவரும் மூன்றுநேர விசாரணையின் பின்னர் வாக்குமூலங்கள் பெறப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

அவர்களுக்கு எதிராக எதிர்வரும் 27ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது எனப் பொலிஸார் அறிவித்தனர்.

நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் அஞ்சலி நிகழ்வு நடத்தும் நபர்களைக் கைதுசெய்யும் நோக்குடன் நேற்றுக் காலை முதல் பொலிஸார் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் கட்சியின் இரு உறுப்பினர்கள் உள்ளிட்டவர்கள் நேற்றுப் பிற்பகல் சுடரேற்றி அஞ்சலி செலுத்தச் சென்றபோது அதற்குப் பொலிஸார் தடை விதித்தனர்.

நீதிமன்றத்தின் தடை உத்தரவு இன்றி என்னைத் தடுக்க முடியாது எனக் கூறி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தடைகளை மீறி அஞ்சலி செலுத்த முற்பட்ட வேளை அவரையும் அவருடன் சென்றவர்களையும் பொலிஸார் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட மூவரும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்ட பின்னரே பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

# தீர்வு காண்பதான நடிப்பு கால் அவகாசம் பெறவே!

## தியாகராஜா நிரோஷ் காட்டம்

(கலையமுதன்)

சர்வதேசம் சென்று காலஅவகாசத்தை பெறவதற்கான நோக்கத்தோடு தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்க்கப் போகின்றனர் என சில பல விடயங்களை அரசாங்கம் கூறிக் கொண்டிருக்கிறதென ரெலோவின் யாழ் மாவட்ட அமைப்பாளரும், வலி.கிழக்கு பிரதேச சபையின் தவிசாளருமான தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

நேற்று யாழ் ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கை அரசாங்கத்தின் தலைவர்கள் சர்வதேச அளவில் பல சந்திப்புக்களை நடத்தி வருகின்றார்கள். சர்வதேச தலைவர்களை சந்திக்கும் போதும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வேன் என்று சொல்கின்றார்கள். ஆனால் இங்கே வருடக்கணக்கில் நீண்ட காலமாக தமிழ் அரசியல் கைதிகள் விசாரணையின்றி சிறையில் இருக்கின்றார்கள்.

சர்வதேச சட்டங்களுக்கு முரணாக எங்களுடைய உறவுகள் அரசியல் கைதிகளாக இருந்து வருகின்றார்கள். இடையிடையே ஒரு சிலர் என்ற அடிப்படையில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலானோர் விடுவிக்கப்பட்டு வருகின்றபோதும் ஏராளமானவர்கள் தொடர்ச்சியாக சிறைகளில் இருந்து வருகின்றார். அவர்களை விடுவிப்பது என்பது ஜனாதிபதியை பொறுத்தவரையில் ஒரு சாதாரண விடயம். பொது மன்னிப்பு அளிக்கலாம். பொதுமக்களைக் கொன்ற இராணுவ அதிகாரியைத் தாம் பதவியேற்றதன் பின்னர் விடுதலை செய்திருந்தார் அவர். பாரத லக்ஷ்மன் கொலை தொடர்பாக துமிந்த சில்வா விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

இவ்வாறு பாரதூரமான மனித உரிமை மீறல்களை செய்தவர்களுக்கு ஜனாதிபதி தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி பொது மன்னிப்பு என்ற அடிப்படையில் விடுதலை செய்திருந்தார். ஆனால் யுத்தம் முடிவடைந்து 11,12 வருடங்கள் கடந்தும் அப்பாவி இளைஞர்கள் அவர்களுடைய முதுமைக் காலம் வரையிலே சிறையில் வாடிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களை விடுவிப்பதற்கு போதுமான நடவடிக்கை இல்லை.

சிறைக்கு பொறுப்பான அமைச்சர் அண்மையிலேயே மிலேச்சத்தனமாக நடந்து, அரசியல் கைதிகளின் உரிமையை பறிக்கக்கூடிய வகையில் நடந்திருக்கின்றார். அவர் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. தன்னுடைய அமைச்சுப் பதவியில் ஒரு துறை சார்ந்த அமைச்சை மாத்திரம் அவர் ராஜினாமா செய்திருக்கிறார். அதற்கு மேலதிகமாக இது தொடர்பாக எதுவும் இடம்பெறவில்லை

காணாமல்போனவர்களின் தாய்மார்கள் இன்றும் வீதிவீதியாக போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நியாயம் கிடைக்கவில்லை. இலங்கை அரச படையினரிடம் சாட்சிகளின் முன்னால் சரணடைந்தவர்கள், வெள்ளைக் கொடியுடன் வந்தவர்களை இன்று வரை கண்டுபிடிக்க முடியவில்லை.

சர்வதேசம் சென்று காலஅவகாசத்தை கோருவதற்கான நோக்கத்தோடு தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்க்கப் போவதாக சில பல விடயங்களை கூறிக் கொண்டிருக்கின்றனர் – என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# 5 ஆயிரம் ரூபா மாயையை வடக்கு, கிழக்குக் காட்டி தெற்கில் இனவாதத்தைத் தூண்டுகின்றது அரசாங்கம்

## இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் தீபன்திலீசன் காட்டம்

(கலையமுதன்)

யாழ்ப்பாணம்,செப்.24

வடக்கு கிழக்கிலே 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை ஆசிரியர்கள், அதிபர்கள் பெறுகிறார்கள் என்ற மாயை தோற்றத்தை உருவாக்கி தென்னிலங்கையிலே ஓர் இனவாதத்தைதூண்டும்வகையிலேஅரசுசெயற்படுவதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப தலை வர் தீபன் திலீசன் தெரிவித்தார்.

யாழில் நடந்த ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

செப்டெம்பர், ஒக்ரோபர் மாதத்துக்குரிய 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு என்ற பெயரில் கல்வி அமைச்சால் சுற்றுநிருபம் ஒன்று வெளியிடப்பட்டிருக்கின்றது. முழுக்க முழுக்க அதிபர் ஆசிரியர்கள் உடைய தொழிற்சங்க போராட்டத்தை திசை திருப்பும் நோக்கத்தோடு தான் இந்த சுற்றுநிருபம் வெளியிடப்பட்டு இருக்கிறது என்பதை ஆசிரியர்கள் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்.

குறிப்பாக வடக்கு கிழக்கை பொறுத்தமட்டில் மிக அவசர அவசரமாக இந்தத் தரவுகளை பெறுவதற்கு இந்த அரசாங்கம், அதிகாரிகள் ஊடாக அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றது. இதற்குக் காரணம் என்னவென்று சொன்னால் இங்கே இணைய வழிக் கற்பித்தல் நடப்பதாக தென்னிலங்கையில் காட்டி பெற்றோர்கள் மத்தியிலும் மாணவர்கள் மத்தியிலும் ஒரு முரண்பாடான நிலையை தோற்றுவிக்க வேண்டும் என்பதேயாகும்.

தென்னிலங்கையில் ஆசிரியர் அதிபர் தொழிற்சங்க போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் வடக்கிலே ஒரு கணிசமான அளவு இணைய வழிக் கற்பித்தல் நடந்து கொண்டிருந்தது. அந்தக் காலத்தில் தொழிற்சங்க போராட்டத்தோடு இணைவதற்கான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தது. 60 வீதமான மாணவர்கள் இணையக் கல்வி ஊடாக எந்தவிதப் பயனையும் பெறாத நிலையில், இந்தக் காலத்தில் தமது பிரச்சினைக்குத் தீர்வைக் காணவேண்டும் என்ற அடிப்படையில் ஆசிரியர் அதிபர் தொழிற்சங்கங்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தன.

அந்தக் காலத்திலே மாணவர்களின் நன்மை கருதி இணைய வழிக் கற்பித்தலை நாங்கள் ஆரம்பத்தில் மேற்கொண்டிருந்தாலும்தொழிற்சங்கப்போராட்டத்துக்குப் பின்னர் ஆதரவு தெரிவித்த நிலையில் இந்த 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை நாங்கள் தொழிற்சங்கப் போராட்டத்துக்கு ஆதரவாகப் பெறுவதில்லை என்றுள்ள நிலையில் இருக்கின்ற பொழுது, அதிகாரிகளும் ஒருசில ஆசிரிய ஆலோசகர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்களும்தனிப்பட்ட முறையில்ஆசிரியர்களைதொலைபேசியில் தொடர்புகளை மேற்கொண்டு பதிவுசெய்ய வற்புறுத்துகின்றனர் என எமக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றிருக்கின்றது. நாங்கள் இதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம். இதுபோன்ற செயற்பாடுகள் தொடர்பில் அவர்களுக்கு எதிராக தொழிற்சங்க நடவடிக்கையிலும் ஈடுபடுவோம்.

ஆசிரிய ஆலோசகர் சங்கமும் இந்தப் போராட்டத்தில் இணைந்திருக்கின்றது. ஆனால் ஒருசில அதிகாரிகளின் செயற்பாடு ஆசிரியர்களுடைய போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் கோணத்திலேயே உள்ளது. அவர்களுக்கு ஒரு விடயத்தைக் கூறிவைக்க விரும்புகிறேன். சுபோதினி ஆணைக்குழுவின் அறிக்கையில் ஆசிரிய ஆலோசகர்கள் தொடர்பிலும் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டு இருக்கின்றன என்பதை மறக்கவேண்டாம்.ஆகவே, எங்களுடைய போராட்டத்தை நீர்த்துப்போகச் செய்கின்ற வகையில் ஒரு சிலர் செயற்படுகின்றமை அனைத்து சமூகத்தையும் பாதிக்கும் என்ற எண்ணத்துடன் பொறுப்பாக நடந்து கொள்ள வேண்டும்.

வடக்கு கிழக்கிலே இந்த 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை பெறுகிறார்கள் என்ற மாயை தோற்றத்தை உருவாக்கி தென்னிலங்கையிலே ஓர் இனவாதத்தை தூண்டும் வகையிலே செயற்படுகின்ற அரசுக்கு துணை போகாதீர்கள். - என்றார்.

### கோண்டாவில் வாள் வெட்டு;

# கை துண்டாடப்பட்ட சம்பவம் சந்தேகநபர்களுக்குப் பிணை!

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கோண்டாவிலில் இடம்பெற்ற வன்முறையில் ஒருவருக்கு கை துண்டாடப்பட்டும் மேலும் 6 பேர் படுகாயமடைந்த சம்பவத்துடன் தொடர்புடைய முக்கிய சந்தேக நபர்கள் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் சரணடைந்த நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

சட்டத்தரணி ஊடாக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் கடந்த புதன்கிழமை சந்தேக நபர்கள் மூவரும் முற்படுத்தப்பட்ட போது, கோப்பாய் பொலிஸார் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத நிலையில் நீதி மன்றால் பிணை வழங்கப்பட்டது.

கடந்த ஜூன் 30 ஆம் திகதி கோண்டாவிலில் வீடொன்றுக்குள் புகுந்த அங்கிருந்த 7 பேரை கூரிய ஆயுதங்களினால் தாக்கி படுகாயம் விளைவித்தும் வீட்டிலிருந்த பெறுமதியான பொருள்களை தாக்கிச் சேதப்படுத்தியும் தீவைத்தும் வன்முறையில் ஈடுபட்டனர் எனக் கோப்பாய் பொலிஸார் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் பி அறிக்கை தாக்கல் செய்திருந்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய நால்வர் ஏற்கனவே யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

சந்தேக நபர்கள் நால்வரும் கடந்த ஜூலை 5 ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டமையுடன் அடையாள அணிவகுப்புக்குட்படுத்த மன்று உத்தரவிட்டிருந்தது.

எனினும் நாட்டில் ஏற்பட்ட கொவிட் - 19 நோய்ப் பரவல் காரணமாக சந்தேக நபர்கள் நால்வரும் ஓகஸ்ட் 19 ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

அதேவேளை சம்பவத்துடன் தொடர்புடைய முக்கிய 3 சந்தேக நபர்கள் தலைமறைவாகியிருந்த நிலையில் கடந்த புதன்கிழமை தமது சட்டத்தரணி ஊடாக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் சரணடைந்தனர்.

சந்தேக நபர்கள் மூவரை பிணையில் விடுவிக்க அவர்களது சட்டத்தரணி பிணை விண்ணப்பத்தை மன்றில் முன்வைத்தார்.

பிணை விண்ணப்பத்துக்கு மன்றில் தோன்றியிருந்த கோப்பாய் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. அதனால் சந்தேக நபர்கள் மூவரையும் தலா 5 லட்சம் ரூபா பெறுமதியான 2 ஆள் பிணையில் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதனால் முக்கிய சந்தேக நபர்களை அடையாள அணிவகுப்புக்கு உள்படுத்தும் செயல்முறையும்

# பொத்தானை அழுத்தி முழு இலங்கையையும் இருளில் மூழ்கடிக்க அமெரிக்காவால் முடியும்!

### விஜித ஹேரத் கூறுகிறார்

கெரவலப்பிட்டிய யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் 40 வீத பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்குவதை நிறுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

நள்ளிரவு 12.06 மணியளவில் இரகசியமான முறையில் அமெரிக்காவின் நிறுவனத்துக்கு யுகதனவி மின் உற்பத்தி நிலையம் வழங்கப்பட்டுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதன்காரணமாக, பொத்தான் ஒன்றை அழுத்தி முழு இலங்கையையும் இருளில் மூழ்கடிக்க அமெரிக்காவால் முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலான விடயம் எனவும் மக்களின் இறைமைக்கு எதிரான தீர்மானம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# காங்கேசன்துறையில் வீடொன்றில் உருக்குலைந்த நிலையில் சடலம்!

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை பகுதியில் வீடொன்றில் இருந்து முதியவரின் சடலம் ஒன்று உருக்குலைந்த நிலை யில் மீட்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை வீமன்காமம் பகுதியில் தனிமையில் வசித்து வந்த முதியவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேற்படி முதியவர் கடந்த சில தினங்களாக வீட்டை விட்டு வெளியே வராத நிலையில் வீட்டில் இருந்து துர்நாற்றம் வீசியதை அடுத்து அயலவர்கள் வீட்டின் கதவை உடைத்து பார்த்த போது முதியவர் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் காங்கேசன்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் சடலத்தை மீட்டு, பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

குறித்த முதியவர் சில நாள்களுக்கு முன்னரே உயிரிழந்து விட்டார் எனவும், அதனால் சடலம் உருக்குலைந்த நிலையில் காணப்படுவதாகவும் சம்பவம் தொடர்பில் தாம் விசாரணைகளை முன்னெடுத்து உள்ளோம் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.09.2021 இல் வெளியிடப்பெற்றது.

# கிளிநொச்சியில் நேற்று பயன்தரு மரங்கள் அழிவு




(ந.லோகதயாளன்)
யாழ்ப்பாணம், செப்.24

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று இரு மணி நேரம் கடும் காற்றுடன் கூடிய கன மழையின் காரணமாக பல பயன்தரு மரங்கள் முறிந்து நாசமாகின.

இதன்போது திருவையாறுப் பகுதியில் பலரின் தென்னைகள், பலா மரங்களுடன், வாழைகள் பலவும் முறிந்து சேதமாகின.

இவ்வாறு ஏற்பட்ட சேதங்களின்போது நூற்றுக் கணக்கான வாழைகள், இருபதுக்கும் மேற்பட்ட தென்னைகள், ஏழு பலாமரங்கள் என்பனவும் முறிந்து அழிந்தமையுடன் சில வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

# வவுனியா - மன்னார் வீதியில் நேற்று சுப்பர் மார்க்கட் தனிமைப்படுத்தலில்!




சுகாதார அறிவுறுத்தல்களை மீறி செயற்பட்டதாகத் தெரிவித்து வவுனியா – மன்னார் வீதியில் அமைந்துள்ள பிரபல சுப்பர் மாக்கட் ஒன்று சுகாதாரப் பிரிவினரால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

கொவிட் பரவல் வவுனியாவில் தொடர்ந்தும் நீடித்து வரும் நிலையில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை மீறி செயற்படல் மற்றும் சுகாதார வழிமுறைகளை பின்பற்றாது செயற்படல் உள்ளிட்ட நடவடிக்கைகள் தொடர்பில் வவுனியா – மன்னார் வீதியில் விசேட சோதனை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கை ஒன்றைச் சுகாதாரப் பிரிவினர் நேற்று முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது, வவுனியா – மன்னார் வீதியின் வேப்பங்குளம் பகுதியில் அமைந்துள்ள பிரபல சுப்பர் மார்க்கட் ஒன்று சுகாதார அறிவுறுத்தல்களை மீறி மக்களை ஒன்றி கூட்டி வியாபாரத்தில் ஈடுபட்டமை சுகாதாரப் பிரிவினரால் அவதானிக்கப்பட்டது. இதனையடுத்து, குறித்த சுப்பர் மாக்கட் சுகாதாரப் பிரிவினரால் 14 நாள்களுக்கு தனிமைப்படுத்தப்பட்டது.(உ-100)

# தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் கஜேந்திரனின் கைதுக்குக் கண்டனம்

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் கைது செய்யப்பட்டமை தொடர்பில் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளது. கஜேந்திரன் கைது தொடர்பில் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் வடக்கு கிழக்கு இணைப்பாளர் அன்ரனி ஜேசுதாசன் தெரிவிக்கும் போது –

தியாகி திலீபனின் நினைவு நாளில் தொடர்ச்சியாக விளக்கேற்றி வருகிறார்கள். இந் நிலையில் அவர் இன்று கைது செய்யப்பட்டிருக்கிறார். அவர் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்றும் பாராது அவரது ஆடைகளை இழுத்த அவருக்கு அடித்து இழுத்த கைது செய்தமை கவலைக்குரிய விடயமும், வேதனைக்குரிய விடயமும் ஆகும். இது கண்டனத்திற்கும் உரிய விடயம். ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கே இப்படி என்றால், சாதாரண மக்களுக்கு என்ன நிலைமை? தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் என்பதால்தான் இவர்கள் இப்படி செய்கிறார்கள். ஒரு சிங்கள நாடாளுமன்ற உறுப்பினருக்கு இப்படி செய்ய முடியுமா?

இந்த மோசமான செயலை நாம் கண்டிக்கிறோம்.

அதுமட்டுமின்றி அதிகமாக தமிழ் மக்கள் வாழுகின்ற பகுதியில் சிங்களப் பொலிஸாரை ஈடுபடுத்துவதால் அவர்களின் தொடர்பாடல் மிகவும் பாதிக்கப்படுகிறது. கஜேந்திரன் எம்.பி. தமிழில் சொல்கின்ற விடயங்களை அவர்களால் புரிந்து கொள்ளவும் முடியவில்லை. – என்றார்.

# மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை புற்றுநோயியல் பிரிவிற்கும் நாமல் விஜயம்




(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)
மட்டக்களப்பு, செப். 24

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் புற்றுநோயியல் பிரிவிற்கு தேசிய இளைஞர் விளையாட்டு விவகார மற்றும் அபிவிருத்தி மேற்பார்வை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ நேற்று விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்டார்.

பின்தங்கிய கிராம அபிவிருத்தி, மனைசார் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் அழைப்பின் பேரில் மட்டக்களப்பிற்கு விஜயம் செய்த அமைச்சர் நாமல் ராஜபக்ஷ மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் புற்றுநோயியல் பிரிவில் அமைக்கப்பட்டுள்ள கதிர்வீச்சு சிகிச்சைப் பிரிவைப் பார்வையிட்டார்.

மேலும் இப்போதனா வைத்தியசாலையில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பாகவும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ வைத்தியசாலைப் பணிப்பாளர் திருமதி. கலாரஞ்சினி கணேசலிங்கம் உட்பட வைத்திய நிபுணர்களிடம் கேட்டறிந்து கொண்டார்.

இது தொடர்பாக இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் கருத்து தெரிவிக்கையில் –

இவ்வைத்தியசாலையின் புற்று நோயியல் பிரிவில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பாகவும், பிணவறைல் கட்டடம் மற்றும் மருந்துக் களஞ்சிய அறைக் கட்டடம் அமைத்தல் போன்ற தேவைகள் குறித்தும் தாங்கள் கோரிக்கைகளை முன்வைத்திருக்கின்றனர் எனத் தெரிவித்தார்.

மேலும் கிழக்கு மாகாணத்திலுள்ள ஒரேயொரு போதனா வைத்தியசாலையாகிய இதன் தேவைகளை எதிர்வரும் நாள்களில் பூர்த்தி செய்து சகல வசதிகளும் கொண்ட தரம் வாய்ந்த வைத்தியசாலையாக மேம்படுத்தத் தமது ஒத்துழைப்புகளை வழங்குவார் என அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார் என்றும் கூறினார்.

இந்நிகழ்வின்போது இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் தேனுக விதனகே, மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூ. பிரசாந்தன் மற்றும் அரசியல் பிரமுகர்கள், வைத்திய நிபுணர்கள் எனப் பலரும் பிரசன்னமாயிருந்தனர்.

# கல்முனையில் வாள்வெட்டு இளைஞர் ஒருவர் படுகாயம்



(பாறுக் ஷிஹான்)

வீதியில் இடம்பெற்ற வாக்குவாதம் ஒன்றின் காரணமாக இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில் காயமடைந்த கல்முனை இளைஞன் அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார் .

அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்முனை மதரஸா வீதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் புதன்கிழமை காலை பொதுமுடக்கம் அமுலில் உள்ள நிலையில் தன்னுடைய வீட்டுக்கு முன்னால் வேகமாக மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றவர்களை நிறுத்தி, வேகமாக வாகனத்தை ஓட்டவேண்டாம் என்று இளைஞனின் தரப்பு அறிவுரை கூறியதாகக் கூறப்படுகின்றது.

இதனை தொடர்ந்து பின்னர் அவ்விடத்திற்குச் சென்ற மோட்டார் சைக்கிள் குழுவினர் அவ்விடத்தில் உள்ளவர்களை வாள்களினால் வெட்டி காயப்படுத்தியுள்ளனர்.

இச்சம்பவத்தில் 19 வயது மதிக்கத்தக்க முஹம்மத் ஸபான் என்பவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச்சம்பவம் தொடர்பில் கல்முனை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சம்பவம் இடம்பெற்ற பகுதியில் வீட்டு வாயில் கதவு போன்றவற்றில் வெட்டுத்தடயங்கள் மற்றும் இரத்தத் தடயங்கள் உள்ளமையை அவதானிக்க கூடியதாக உள்ளது.

மேலும் அங்கு கிடைக்கப்பெற்ற காணொலி ஒன்றில் கோபத்துடன் இரு இளைஞர்கள் தாக்குதல் நடத்துவது பதிவாகியுள்ளமையையும் காண முடிகிறது. மேலதிக விசாரணையைக் கல்முனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கைதிகளுக்கு இடையிடயே விடுமுறை அளிக்கும் திட்டம் பரிசீலனையிலாம்!

## நீதி அமைச்சரே கைதிகளிடம் நேரில் தெரிவிப்பு

கொழும்பு, செப்.24

சிறைத் தண்டனை அனுபவிக்கும் கைதிகளில் சிறப்பான நடத்தையை வெளிக்காட்டுபவர்களுக்கு ஒரு வாரம் விடுமுறை வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் குறித்து ஆராயப்படுவதாக நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

சிறைச்சாலை சட்டத்தின் கீழ் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு ஏற்ப இந்தச் சட்டத்தை செயல்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

தம்மை விடுவிக்குமாறு கூறி, வெலிக்கடை சிறைச்சாலையின் கூரையில் ஏறி உண்ணாவிரதத்தில் இருக்கும் கைதிகளின் நலன் குறித்து விசாரிக்க நேற்று வெலிக்கடை சிறைச்சாலைக்கு சென்றபோதே இதை தெரிவித்துள்ளார்.

கூரையில் உண்ணாவிரதம் இருந்து வரும் சில கைதிகளுடன் நீதி அமைச்சர் அன்பாகக் கலந்துரையாடினார்.

கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்குவதிலும், நல்ல நடத்தை கொண்ட கைதிகளுக்கான தண்டனையை குறைப்பதிலும், அனைத்து கைதிகளுக்கும் ஒரே நடைமுறையைப் பின்பற்றுவது குறித்தும் உண்ணாவிரதக் கைதிகளுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டனவென நீதி அமைச்சகம் கூறுகிறது.

மேன்முறையீடுகளைத் தாக்கல் செய்வதில் ஏற்படும் தாமதங்கள், மறுவாழ்வு முறையை முறையாகச் செயல்படுத்துதல் மற்றும் கைதிகள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கான சிறப்பு விசாரணை அமைப்பை உருவாக்குவது பற்றியும் அமைச்சர் கலந்துரையாடியுள்ளார்.

அதன்படி, கைதிகளின் நலனில் சிறப்பு கவனம் செலுத்தவும், தேவையான ஏற்பாடுகள் செய்யப்படும் வரை உண்ணாவிரதத்தை கைவிடவும், உண்ணாவிரதம் இருப்பவர்களுக்கு அமைச்சர் அறிவுறுத்தினார்.